பக்கங்கள்: ஆறு

Registered as a Newspape

NIRU TUITION CENTRE
Station, Road,
Kondavil.
புதிய பாடத்திட்டத்திற்கான
G.C.E. (A/L) 91
கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள்
16. 03. 1989 இல் ஆரம்பமாகின்றன.

# உதயன்

விலை ரூ 2.50

NIRU TUITION CENTRE
Station, Road,
Kondavil
G.C.E. O/L) 89
பகல் நேர வகுப்புக்களும்
MARCH 20 இல் ஆரம்பமாகின்றன.
விபரங்களுக்கு:
— நிர்வாகி

சுடர் 4 விபவ ஸூ பங்குனி மீ 01 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஷஃபா பிறை 05 (14 - 03 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-84

# எல்லைப் புறங்களில் உள்ள சிங்கள கிராமப் பகுதிகளை பாதுகாக்க முடியாத நிலை

## இலங்கை அரசு திணறல்

கொழும்பு, மார்ச் 14

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள சிங்களக் கிராமங்களைப் பாதுகாக்க முடியாத நிலையில் இலங்கை அரசு பெரும் சிரமப்படுகிறது.

இந்த நிலையை மறைமுகமாக எடுத்துக் காட்டும் அறிக்கை ஒன்றை இலங்கை அரசு நேற்று வெளியிட்டது.

எல்லைப்புறக் கிராமங்களில் உள்ள சிங்களக் குடியேற்ற வாசிகளைப் பாதுகாப்பதற்காக விசேட படைப்பிரிவுகளை எல்லைப்பகுதிகளில் இலங்கை அரசு பணியில் ஈடுபடுத்தியுள்ளது.

இந்த விசேட பிரிவுகளில் ஆயுதப்படையினரும், தொண்டர் படையினரும், ஊர்காவல் படையினரும் இடம்பெற்றனர்.

ஆனால் பல இடங்களில் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களை சிங்களத்தீவிரவாதிகள் அபகரித்துச் சென்றிருப்பதாக இலங்கை அரசு நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

பல இடங்களில் பாதுகாப்பு படையினரும், ஊர் காவல் படையினரும் தெரிவு செய்யப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டது.

கந்தளாய், பதவியா, பொலனறுவை, மொறவெவா, ஹொறவப்பொத்தானை உட்பட பல இடங்களில் இத்தகைய சம்பவங்கள் அடுத்தடுத்து இடம்பெற்றதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையினால் எல்லைப் புறப் பாதுகாப்பு நடவடிக்கைகள் முற்றாகச் சீர்குலைந்திருப்பதாக கொழும்புச் செய்திகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிராம சேவையாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை விரைவில்

யாழ்ப்பாணம், மார்ச் 14

கிராம சேவையாளர்களுக்கான நேர்முகப்பரீட்சை விரைவில் நடைபெறும் என யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு டிசம்பரில் கிராம சேவையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. ஆனால் இதற்கான நேர்முகப் பரீட்சை இதுவரை நடத்தப்படவில்லை.

## எண்ணெய் ஆலை தீ விபத்தினால் ஒரு கோடி ரூபா நஷ்டம்

கொழும்பு, மார்ச் 14

கப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற தீ விபத்தினால் ஏற்பட்ட நஷ்டம் ஒரு கோடி ரூபா வரை இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான எண்ணெயும் சேதமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

400 தொன் எண்ணெய் கொள்ளக்கூடிய குதம் முற்றாகச் சேதமடைந்துவிட்டது. அதை மீண்டும் திருத்தி அமைக்க 50 முதல் 70 லட்சம் ரூபா வரை செலவாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

திருத்த வேலைகள் முடிவடைய 8 மாதங்கள் எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ் செயலக உத்தியோகத்தர் 'டை' அணிந்து கடமை புரிவர்

யாழ்ப்பாணம், மார்ச் 14

இந்த வாரம் தொடக்கம் யாழ் செயலக உத்தியோகத்தர்கள் 'டை' அணிந்து கடமையில் ஈடுபடுவார்கள்.

யாழ் செயலக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

அனைத்து அரசாங்க நிர்வாக உத்தியோகத்தர்களும் 'டை' அணிந்து கடமையில் ஈடுபட வேண்டும் என்று அண்மையில் ஜனாதிபதி பணிப்புரை வழங்கியிருந்தார்.

தென்பகுதியில் இது முழுமையாக அமுல்படுத்தப்பட்ட போதும் வடபகுதியில் இத்திட்டம் கவனிக்கப்படாதிருந்தது.

தற்பொழுது கட்டாயமாக யாழ் செயலக அதிகாரிகள் 'டை' அணியவேண்டும் என்றும் 'டை' அணியாமல் கடமையில் ஈடுபட்டால் அந்த நாள் வேலைக்குச் சமுகமளிக்காத நாள் என்று கணிக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-5)

## இரத்மலானையில் 35 பேர் கைது

கொழும்பு, மார்ச் 14

கொழும்பு இரத்மலானையில் நேற்று மாலை பொலிஸார் நடத்திய திடீர் தேடுதல் நடவடிக்கைகளின்போது 35 தீவிரவாத சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

ஐந்து ஷொட்கன்கள், ஒரு ரைபிள், துப்பாக்கி ரவைகள் ஆகியவையும் பெருமளவு பணமும் சந்தேக நபர்களிடமிருந்து பொலிஸாரினால் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (உ)

## தாமதமாக வேலைக்குச் சென்றால் கட்டாய மேலதிக நேர வேலை!

கொழும்பு, மார்ச் 14

தாமதமாக வேலைக்குச் செல்லும் அரச ஊழியர்கள் அதை ஈடு செய்ய மேலதிக நேரம் வேலை செய்யக்கூடிய திட்டம் ஒன்றைக் கொண்டு வருவதுபற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

எல்லோரும் 8 மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்ற நிலையைக் கடுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பதில் அரச வட்டாரங்கள் மிகுந்த அக்கறை காட்டிவருகிறதாம்.

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக தாமதமாக வரும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பந்த், நட்வர்சிங்குடன் மாகாண முதல்வர் பேச்சு

புதுடில்லி, மார்ச் 14

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் நேற்று வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங், பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

பொதுவாக இலங்கையிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் காணப்படும் நிலைமையைப் பற்றி திரு. வரதராஜப்பெருமாள் சுருக்கமாக திரு. நட்வர்சிங்கிடம் எடுத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் ஈரோஸ் பொறுப்பாளரும் மற்றும் ஓர் உறுப்பினரும் கொலை

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஈரோஸ் இயக்கத்தின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளரும் மற்றும் ஓர் உறுப்பினரும் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரது உடல்களும் உயிலங்குளம் பகுதியில் அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

மன்னார் மாவட்டப்பொறுப்பாளரான சதாசகாயம் சில்வா (வயது 29) மற்றைய உறுப்பினரான சவுந்தரராஜன் செல்வராஜ் (வயது 20) ஆகிய இருவரும் கடந்த 10 ஆம் திகதி மடுச்சந்தியில் வைத்து பஸ்ஸில் இருந்து இறக்கி அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை உயிலங்குளம் இராணுவ முகாமிற்கு அருகாமையில் இருந்து இவர்களது சடலங்கள் மீட்கப்பட்டன. (ஒ-5)

## கோழைத்தனமான செயல்; ஈரோஸ் கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

மன்னாரில் நடந்த சம்பவம் ஒரு கோழைத்தனமான, ஈனத்தனமான செயல் என்று ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

விவரம் வருமாறு:-

எமது பொதுக்குழு உறுப்பினரான தோழர் சில்வாவும் (அருளானந்தம் சில்வா—சதாசகாயம் சில்வா, வயது 29) முன்னணித் தோழர் அஜித்தும் (சௌந்தரராசன்-செல்வராஜ், வயது 20) கடந்த 10 ஆம் திகதி மன்னார் மடு ரோட் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டு 12 ஆம் திகதியன்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்பதை மிகவும் மனக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிராயுதபாணிகளாகப் பணிபுரியும் எமது தோழர்களை எந்தக் காரணமுமின்றிச் சுட்டுக் கொலை செய்த இந்தக் கோழைத்தனமான, ஈனத்தனமான செயலை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மீண்டும் மீண்டும் தமிழ் பேசும் மக்கள் அனுபவித்துக் கொண்டுவரும் இன்னல்கள் நீங்கி புத்துணர்வுடன் எதிர்கால வாழ்வினை உறுதிப்படுத்த "அனைத்து சக்திகளையும் உள்ளடக்கிய ஒரு தேசிய மாநாட்டின் மூலம் பொது நிலையை எய்த" நாம் விழையும் இவ் வேளையில் இவ் வகையான சம்பவங்கள் மிகுந்த அதிர்ச்சியைக் கொடுக்கின்றன.

அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறியப் போராடுவதாகச் சொல்லிக் கொண்டே ஏனையவர்கள் மீது அடக்குமுறைகளை ஏவிவிடும் குரூரத்தனம் மிகுந்த இத்தகைய கொலைகளின் மூலம் இவர்கள் மக்களுக்கு என்ன நன்மைகளைச் செய்கின்றனர் என்பதே புரியாத புதிராக உள்ளது.

எமது தோழர்களை இழந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப...நாட்டு நிலைமை, போக்குவரத்து இடைஞ்சல் எண்டு வேலைக்கு அரைவாசி நேரம் டிமிக்கி கொடுக்கிற வையள் பாடு பெரும் கஷ்டம் எண்டு சொல்லுங்கோ......!

### சுபநேரம்

14 – 03 – 1989
பங்குனி – 01

சுபநேரம்:
10 – 52 முதல் 12 – 22 வரை

ராகுகாலம்:
03 – 22 முதல் 04 – 52 வரை

## ரம்பாவவில பஸ் பயணிகளிடம் ஆயுதக் கோஷ்டியினர் கொள்ளை

வல்வெட்டித்துறை, மார்ச் 14

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ் பயணிகள் ரம்பாவ பகுதியில் வைத்து கொள்ளையர்களின் கைவரிசைக்கு இலக்காகினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

கொள்ளையர்களின் "நாடகம்" நடந்து கொண்டிருந்த போது பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக வந்து சிலரைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

நள்ளிரவு வேளையில் துப்பாக்கி, வாள், கத்தி போன்ற ஆயுதங்களுடன் நின்ற கொள்ளையர் கூட்டம் தனியாருக்குச் சொந்தமான இரு பஸ்களில் கொள்ளை அடித்தனர்.

பயணிகளிடம் இருந்த நகை, பணம் மற்றும் உடைமைகள் கொள்ளையிடப்பட்டன.

நகைகளை கழற்றித் தராவிட்டால் வாளால் வெட்டி எடுக்கப்போவதாகச் சில பயணிகளை அவர்கள் பயமுறுத்தினராம்.

கொள்ளை நாடகம் தொடர்ந்து கொண்டிருக்கையில் அவ்வழியே வந்த பருத்தித்துறை சாலைக்குச் சொந்தமான பஸ்ஸைச் செலுத்திய சாரதியும், நடத்துனரும் சம்பவத்தைத் தூரத்தே அவதானித்துவிட்டு அதனைத் திருப்பிக்கொண்டு போய் அனுராதபுரத்துக்குச் சமீபமாக உள்ள பொலிஸ் நிலையத்தில் முறையிட்டனர்.

அதை அடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக வந்து ஆயுதக் கோஷ்டியைச் சேர்ந்த சிலரைக் கைது செய்ததாகத்தெரியவருகிறது.

கொள்ளையரிடமிருந்து சில பொருள்கள் மீட்கப்பட்டதாகவும் அறியவருகிறது. (ஓ-160)

## அமெரிக்க வீசா விண்ணப்பம்: இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வாஷிங்டனில் கிடைக்க வேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 14

அமெரிக்க வீசாவுக்கு விண்ணப்பம் அனுப்புவோர், தங்கள் மனுக்கள் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர்

OP — 1
P. O. BOX 201 9
WASHINGTON. D C
20199 — 9998
U. S. A.

என்ற விலாசத்தை அடைந்துவிடக்கூடியதாக அனுப்ப வேண்டும்.

மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் இங்கிருந்து விண்ணப்பங்களை அனுப்பினால் போதும் என நினைப்பது தவறு.

மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னரும், மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்குப் பின்னரும், கிடைக்கும் எந்த விண்ணப்பமும் கம்பியூட்டர் பரிசீலனைக்குச் சேர்க்கப்படமாட்டாது.

இந்த விவரம் வாஷிங்டனில் உள்ள அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் வெளிநாடுகள் விவகார சபையினால் வெளியிடப்பட்ட 19 ஆம் இலக்க ஆறுலது தொகுதி வீசாச் செய்தி மடலில் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செயலகத்திலும் கம்பியூட்டர்

யாழ் செயலகத்தில் சில நடவடிக்கைகள் கம்பியூட்டர் (கணனி) மயப் படுத்தப்படவுள்ளன.

முதல் கட்டமாக யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனர் நிர்மாணக் கொடுப்பனவுகளை பதிவு செய்வதற்கு கம்பியூட்டர் பயன்படுத்தப்படவுள்ளது.

யாழ் செயலக வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

கொடுப்பனவுகளை தரவுகளாக கம்பியூட்டரில் பதிவு செய்வதன் மூலம் தவறுகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-5)

## வடமத்திய மாகாணத்தில் நேற்று 4 படையினர் பலி!

வடமத்திய மாகாணத்தில் நேற்று இடம்பெற்ற தனித்தனியான சம்பவங்களில் ஒரு கான்ஸ்டபிளும் மூன்று படைவீரர்களும் கொல்லப்பட்டனர்.

ஓயாமடு கிராமத்திற்கு அருகில் ஒரு பொலிஸ் ஜீப்பை தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கினர். அதில் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார். வேறு மூவர் காயமடைந்தனர்.

இன்னொரு சம்பவத்தில் ஹொறவப்பொத்தானைக்கு அருகே பஸ் ஒன்றுக்கு காவலாகச் சென்று கொண்டிருந்த மூன்று படைவீரர்கள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர்.

பஸ்ஸில் பயணிகள் போன்று பயணஞ் செய்த தீவிரவாதிகள் சிலர் படைவீரர்கள் மீது பாய்ந்து முதலில் அவர்களைக் கத்தியால் குத்தினர்.

வீரர்கள் பஸ்ஸில் இருந்து பாய்ந்து தப்பித்துச் செல்ல முயன்றபோது அவர்கள் மீது தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். மூன்று வீரர்களும் அந்த இடத்திலேயே இறந்தனர்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர். நூறுக்கும் மேற்பட்டவர்கள் அச்சமயம் கைதாகினர். விசாரணைக்காக அவர்கள் தடுத்துவைக்கப்பட்டனர். (உ-எ)

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**வீடியோ கமெரா விற்பனைக்கு**

J V. C. 70E Title Model Sony 3000 வீடியோ கமெராக்கள் மற்றும் வீடியோ உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: Sun Video Complex, K. K S Road, Thavady Junction, Thavady (C/1871)

Honda ஜெனரேட்டர் 1600 W மிக நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 84 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (9938)

**ஆங்கில புத்தகம்**

ஆரம்பம் முதல் G. C. E (O/L) வரை இலக்கணம், பேச்சுப்பயிற்சி, அப்பியாசம் முதலியவற்றை உள்ளடக்கிய புதுமையான முறையில் T. இராஜலிங்கம் என்பவரால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகம்: BASIC GRAMMAR AND SPOKEN PRACTIC-AL; கிடைக்கும் இடம் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (9814)

**UPLANDS FARM**

நாற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Dekalb) பிறவுண் சேவல்குஞ்சு விலை ரூ 4. 50 (15-3-89) புதன் கிழமை விநியோகிக்கப்படும். மொத்தமாக வாங்கி விநியோகிக்கும் வியாபாரிகளுக்கும் பாம்காரர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு. முன்கூட்டியே பதிவு செய்யவும். இல. 9, கந்தையா லேன், சுன்னாகம், (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (9925)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள் 15 ஆந் திகதி புதன் கிழமையும், Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள், பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், பிறவுண் சேவற் குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் 16 ஆந் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (9939)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

**UPLANDS FARM**

கறுப்பு (பிளிமத்) வரிச் சேவல் குஞ்சு (16-3-89) வியாழக்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (9944)

**TYPEWRITERS**

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் தமிழ் ஆங்கில டைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/1876)

**விற்பனைக்கு**

கண்ணைக்கவரும் எவர்சில்வர் பாத்திரங்களுக்கு நாடுங்கள் "Rajz Brand" தரமானவை. நீடித்து உழைப்பவை. இருநூற்றுக்கும் மேற்பட்ட பலவகை டிசைன்களில் பல்வேறு நிலையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரே உற்பத்தியாளரால் உற்பத்தி செய்யப்படுகின்றன. Rajz Brand எவர்சில்வர் தயாரிப்புகள் யப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான A. S. 3043, தகடுகளால் செய்யப்படுகின்றன. காட்சி அறை, S. A. Thevathasan, சூராவத்தை, சுன்னாகம். (C/1890)

பாவித்த சகல வீட்டுத் தளபாடங்கள் Show Case T. V குளிர் சாதனப் பெட்டி, தையல் மெஷின், கசற் ரேடியோ, செற்றி, மேசைகள், Pram, சிறியகார், Cot சைக்கிள் Office மேசை கட்டில் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. நடராஜா, குருக்கள்மடம் வீரகாளி அம்மன் கோயில் வளவு, நல்லூர். (9844)

**NEW CITY TRADERS**

சகல விதமான சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், Film roll வகைகள், சூட்கேஸ் Travelling bags, School bags, Wheel bags, எவர்சில்வர் பொருள்கள், Glass மற்றும் அன்பளிப்புப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள New City Traders, 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (C/1840)

**தேவை**

ஆங்கில அச்சுக்கோர்ப்பாளர்கள் (இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்) பிளேட்டின் மெஷின்மைண்டர்கள் தேவை நேரில் வரவும். செட்டியார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C 1879)

**கல்வி**

பௌதிகவியல் தூய/பிரயோக கணிதம் A/L 90- 20-3-89 திங்கட்கிழமையும், A/L 91 17-3-89 வெள்ளிக் கிழமையும் ஆரம்பமாகின்றது. அனுபவமுள்ள இரு பட்டதாரி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். 132/2, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (9837)

**வகுப்புகள்**

தொடக்கத்திலிருந்து பல்கலைக்கழகத் தரம் வரை ஆங்கிலம் Spoken English பட்டதாரி பயிற்றப்பெற்ற ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். பாட்டு, வயலின், மிருதங்கம் பரீட்சைகளுக்கு: கலாநிலையம், சித்தன்கேணி, (மாதர் சங்கக் கட்டிடத்திற்கு அருகாமையில்) (9930)

## நன்றி நவிலல்

### நடேசன் மணிவண்ணன்

[ கிழக்குப் பல்கலைக்கழக 2ஆம் வருட விவசாயபீட மாணவன், யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவன் ]

எமது புதல்வன் திருமணி அனைய ஒரு மணி வண்ணனின் பிரிவாகிய ஆழ்த்துயரோடு நாமும் பெருந்துயரடைந்து இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டதுடன், அரிய உதவிகள் புரிந்த கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள், அனுதாபச் செய்தி வெளியிட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், எழுத்தாளர்கள், கலைஞர்கள் அன்பர்கள் அனைவர்க்கும் எமது உள்ளன்புடன் கூடிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தவிர்க்க முடியாத வசதியீனத்தால் முன்பு அறிவித்தபடி இறுதிக்கிரியை நடைபெறும் திகதியை அறிவிக்க இயலாது போனமைக்கு வருந்துகின்றோம்.

சின்னப்பா வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்,
11-03-89.

க நடேசன்
(நவாலியூர் நடேசன்)
திருமதி புவனேஸ்வரி நடேசன்
(9843)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின்
வெளிவாரி பட்டமாணிப்
பரீட்சைகள்

# G. A. Q. - B. A.

1989- கல்வியாண்டிற்கான பதிவுகள் - மேற்படி பாடநெறிக்கு இதுவரை பதிவு செய்யாதவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

G. C. E. A/L பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் B. A பாடநெறிக்கு பதிவு செய்யலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி 16-3-89**

B. A. - G. A. Q- புதிய பிரிவுக்கான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

**பதிவுகள் அனைத்தும் நிறுவனத்தினால் செய்து தரப்படும்**

விபரங்களுக்கு:

## ASTAN INSTITUTE

166/1 Hospital Road, Jaffna.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)
(C/1891)

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## A L 91

**கலை, வர்த்தகம்**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| அளவையியல் | — | எஸ். எஸ். மனோகரன் |
| வர்த்தகம் | — | ரட்ணம் |
| கணக்கியல் | — | மரியதாஸ் |
| தமிழ் | — | மீரா |
| இந்துநாகரிகம் | — | ஜோதிஸ்வரன் |
| புவியியல் | — | இக்னேசியஸ் |
| அரசியல் | — | சுந்தரமூர்த்தி |

**ஆரம்பம்: 19 03-89**
**ஞாயிறு காலை 10.30**
(C/1905)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி



**சின்னத்துரை கேதீஸ்வரன்**
(அரவிந்த் — காண்டீபன்)

மலர்வு: 1969-08-05
உதிர்வு: 1989-02-10

ஆயிரம் கூடுகள் தனைக் கட்டி
ஆசையுடன் வளர்த் தெடுத்தோம்
இருபது வயது தனைக் காணாமல்
இறைவனடி சேர்ந்தாயோ?
இன்பமுடன் வாழ்ந்த
உன் சின்னண்ணையை இழந்த
உற்ற துயர் தீராதிருக்க
உன் துயரும் எம்மைத் தாக்கியதே!
உனை இழந்ததோ ஒரு மாதம் தான்
ஆனால் எம் மனதினின்றும்
என்றும் மறையாது உன் உருவம்.

உன் பிரிவுத்துயரில் வாடும்:
அன்புப் பெற்றோர்,
அக்கா, அண்ணா, தம்பி,
[illegible]

உயிலங்குளம்,
மன்னார்.

(9846)

**கிருஷ்ணன் கோயில் புனரமைப்பு**

வட்டக்கச்சி, மார்ச். 14

வன்செயல்களின் போது பாதிக்கப்பட்ட கிளிநொச்சி கிருஷ்ணன் கோயில் இந்திய அமைதிப்படை "ஒக்ஸ்பாம்" நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் புனரமைக்கப்படவிருக்கிறது.

கோயிலின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை கோயில் பரிபாலன சபைத் தலைவர் திரு. எஸ். சிவராஜலிங்கம் இம் மாதம் முதலாம் திகதி நட்டார்.

புதிதாக அமைக்கப்படும் கட்டடம் 50 அடி நீளமும், 15 அடி அகலமும் கொண்டதாயிருக்கும். (ச-163)

**ஸ்கந்தா சாம்பியனானது**

யாழ்ப்பாணம், மார்ச். 14

சண்டிலிப்பாய் [illegible] விளையாட்டுக் கழகம் நடத்திய ஒன்பது பேர் கொண்ட "நொக் அவுட்" முறையான உதைபந்தாட்டப் போட்டியில் ஸ்கந்தா சாம்பியனானது.

எஸ். பி. கோ. விளையாட்டுக்கழகத்துக்கும் ஸ்கந்தாக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற இறுதிச் சாம்பியன் போட்டியில் ஸ்கந்தா கோஷ்டி 4 - 2 கோல்களால் வெற்றி பெற்று சாம்பியனானது.

அளவெட்டி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியிலும் ஸ்கந்தாவின் இரு அணிகள் இறுதிப்போட்டிக்கும் அரை இறுதிப் போட்டிக்கும் தெரிவாகி உள்ளது குறிப்பிடத்தக்கது. (ச)

## கண்ணீர் அஞ்சலி

சைவமணி, சித்தாந்தச் செம்மல், செஞ்சொல் வாரிதி
**அமரர் வித்துவான் மு. சபாரத்தினம்**

மலர்வு:- 09.09.1924
உதிர்வு:- 11 03.1989

எமது முன்னைநாள் ஆசிரியரின் ஆத்மா சாந்தி அடைய ஆண்டிகேணி ஐயனாரைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.
யா/கலாநிதி ஆ. தியாகராஜா
ம. ம. வி. காரைநகர்.

காரைநகர்.
14.3.1989
(9847)

## எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

ரஜனிகாந்த், நதியா, ராதா,
'ராஜாதிராஜா'

சத்யராஜ், ராதிகா
'தாய்நாடு'

**குணம் வீடியோ சென்டர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/1644)

பிரயாணம்.., பிரயாணம்.... பிரயாணம்.....

# 'M' Three Travel

வழங்கும்

## உடனடிப் பிரயாணம்

● **சவூதி அரேபியா**

| | | |
|---|---|---|
| I (1) | Electronic Engineer | 1800 SR |
| (2) | Mechanical Engineer | 1500 SR |
| (3 | Electrical Engineer | 1500 SR |

II கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு ஏற்கனவே "YOU ONE" (சவூதி) கொம்பனியில் வேலை செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| (1) | Grader Operator's (கிறேடர் ஒப்பறேற்றர்) | 220 U.S.D |
| (2) | Excavator Operator's (எக்ஸ்காவேற்றர் ஒப்பறேற்றர்) | 220 U.S.D |
| (3) | Wheel Loader's (வீல் லோடர்) | 220 U.S.D |
| (4) | Crane Operator's (கிறேன் ஒப்பறேற்றர்) | 22' U.S.D |
| (5) | Dozer Operator's (டோஸர் ஒப்பறேற்றர்) | 220 U.S.D |
| (6) | Disel Petrol Mechanic's (டீசல், பெற்றோல், மெக்கானிக்) | 220 U.S.D |
| (7) | Trailor Driver's (ரிறைலர் வாகன சாரதி) | 220 U.S.D |
| (8) | Car Painter (கார் பெயின்ரர்) | 750 SR |

III 1. Harbour Maintenance Workers
துறைமுக பராமரிப்பு தொழிலாளர்களுக்கும்
உடனடி வெற்றிடம் உண்டு.

IV 1. சிரியா!
பணிப்பெண்கள்
(ஒரு வார காலத்துக்குள் பயணம் செய்யலாம்)
மேற் கூறிய வெற்றிடங்களுக்கு
சாப்பாடு, இருப்பிட, மருத்துவ வசதிகள் இலவசம்

● குறிப்பு:- Passport (கடவுச்சீட்டு), Bond (பொன்ட்) என்பன உடன் செய்து கொடுக்கப்படும்.
எமது முகவர் தற்சமயம் இவ்விடம் உள்ளார். கடவுச்சீட்டு (Passport) கொடுத்தவரது பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. உடன் வந்து சந்திக்கவும்.

✶ உங்கள் எதிர்காலம் ஒளி பெற வேண்டுமானால் ✶
● நம்பிக்கை ● நாணயம்
என்பவற்றிற்கு நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்:

# 'M' THREE TRAVEL

**Head Office:**
'Indrabawanam'
Sothy Veethy,
**Kankesanthurai.**

**Branch Office:**
No 1, 2nd. Lane,
Power House Road,
**Jaffna.**

(C-1897)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணி கொலை:

# ஜுரர்கள் இன்றி 3 நீதியரசர் முன்னிலையில் விசாரணை

கொழும்பு, மார்ச் 14

சட்டத்தரணி விஜேதாஸ லியனாராச்சி கொலை வழக்கு ஜுரர்கள் இன்றி மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் விசாரிக்கப்பட வேண்டும் என்று பிரதம நீதியரசர் திரு. பரிந்தாரணசிங்க உத்தரவிட்டிருக்கிறார்.

ட்ரயல் - அற்-பார் விசாரணை இம்மாதம் 27 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாக இருக்கிறது.

விசாரணைக்குழுவில் அங்கம் வகிக்கும் மூன்று நீதிபதிகளின் பெயர்களும் வருமாறு:

★ திரு. எப்.என். டி. ஜெயசூரியா (பலப்பிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி)

★ திரு. ஏ. எல். எம். பெர்ணண்டோ (பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி)

★ திரு. வால்டர் வைத்தியரத்ன (கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி)

இவ்வழக்கில் பொலீஸ் அதிபர் கே. தர்மதாஸ, சப் இன்ஸ்பெக்டர் டபிள்யூ. டபிள்யூ ஹரிசிங்க மென்டிஸ், கன்ஸ்டபிள்யூ எம். திஸநாயக்கா ஆகியவர்கள் மீது கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. (இ-எ)

## மழை

வவுனியா பகுதியில் கடந்த சுமார் மூன்று மாதங்களாக வரட்சி நிலவியபின் கடந்த சனிக்கிழமை ஓரளவு மழை பெய்தது

பருவமழை பெய்யாததினால் வேளாண்மை முயற்சிகள், தோட்டச் செய்கைகள் இங்கு முற்றாகப் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்து வருகின்றன. (ச-164)

## பணம் திருட்டு

திருநெல்வேலிப் பகுதியில் உள்ள நியூ சிவன் கோவில் வீதியில் உள்ள ஒரு வீட்டில் இருந்து பல ஆயிரம் ரூபா களவு போயுள்ளது என அறிய வருகிறது. (இ-ரி)

## நெசவுத்தறிகள்

இந்திராபுரத்திலுள்ள நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் கிளிநொச்சி மாவட்ட ஹெர்டெக் நிறுவனத்தினர். கடன் அடிப்படையில் மூன்று நெசவு தறிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.


**FORTUNA ENTERPRISES**
(Labour Licence No. 79)

IMMEDIATE VACANCIES IN KUWAIT

உடனடி வேலை வாய்ப்புக்கள் (குவைத்)

1. Hospital Cleaners 3 years Contract — 200
ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர் 3 வருட ஒப்பந்தம்
சம்பளம்: 30 K. D. + இருப்பிடவசதி
(7 K. D குறையாத மேலதிக நேர வேலை திடப்படுத்தப்பட்டுள்ளது)
அத்துடன்
இலவச உடை, மருத்துவம், காப்புறுதி.

2 Irrigation Labourers — 60
(விவசாயத் தொழிலாளர்)
சம்பளம்: 35 K D. - Rs. 4200/-

3. Foreman (Irrigation) — 05
மேற்பார்வையாளர் (விவசாயம்)
சம்பளம்: 75 K. D. - Rs. 9000/-
(விவசாயத்தில் நன்கு அனுபவமுள்ள, விவசாயப் பண்ணையில் அல்லது விவசாய இலாகாவில் குறைந்தது 5 வருட அனுபவமுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.)

4. Light Vehicle Drivers (சாரதிகள்) — 25
சம்பளம் 50 K. D. - Rs. 6000/-

5. Landscape Labourers
மண் தோண்டும் தொழிலாளர் — 15
சம்பளம்: 35 KD - R. 4200/-

நாடவேண்டிய முகவரி:

இ. விஸ்வேஸ்வரன்
3 ஆம் கட்டை லேன்
கே. கே எஸ். வீதி,
கொக்குவில்.

[C-1886]



★ சிவாகி ★

சிவன் வீதி, சாவகச்சேரி.

A/L 91 கலை, வர்த்தகம், விஞ்ஞானம்

ஆரம்பம்: 15-03-1989 பிற்பகல் 2-00 மணி

எமது தனித்துவமான ஆசிரியர் குழு:

★ ECO. க. கலாகரன்
★ COM. இ. இரட்ணம்
★ ACC. S. K. பிரபாகரன்
★ HINDU. P. ஜோதீஸ்வரன்
★ LOG. கேசவன்
★ TAMIL. சாந்தி
★ GEO. முருகையன்
★ PHY. சோதிலிங்கம்
★ BOT. பாலா
★ ZOO. ஈசன்
★ CHE. ரங்கன்

● தூர இட மாணவர் நலன் கருதியே நேர அட்டவணைகள் வழங்கப்படும்.

[C-1837]




கல்முனையில் தமிழ் மக்களுக்கென தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவு அமைக்கப்படுவது சில அரசியல் வாதிகளால் தடுக்கப்பட்டதைத் தொடர்ந்து கல்முனைத் தமிழ் மக்கள் கல்முனை உதவி அரச அதிபர் காரியாலயம் முன்னால் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம். (இ- 84)

# கல்முனையில் ஆர்ப்பாட்டம்;மறியல்

கல்முனை, மார்ச் 14

கல்முனையில் தமிழ் மக்களுக்கென ஒதுக்கப்பட்ட கரவாகு வடக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குப் பதிலாக தமிழ் மக்களை சிறுபான்மையாகக் கொண்டதான மூன்று உதவி அரச அதிபர் பிரிவுகளை ஏற்படுத்தும் அம்பாறை மாவட்ட அரச அதிபரின் உத்தரவை ஆட்சேபித்து கல்முனை வாழ் தமிழர்கள் அனைவரும் சமீபத்தில் கல்முனை பிரதான வீதியில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும் கல்முனை உதவி அரச அதிபர் காரியாலய முன்றலில் மறியல் போராட்டத்தையும் நடத்தினர்.

ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், குழந்தைகள் உட்பட சுமார் மூவாயிரம் பேர் இதில் கலந்து கொண்டனர்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது :-

அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் கல்முனைத் தொகுதிவாழ் தமிழ் மக்களின் நன்மை கருதி கோரிய தமிழர்களுக்கான ஒரு தனி அரச அதிபர் பிரிவுக் காரியாலயம் பெப்ரவரி 3 ஆம் திகதி திறக்கப்பட இருந்தது.

சில அரசியல்வாதிகளின் தலையீட்டினால் பொதுத் தேர்தல் முடியும்வரையும் இப்பிரிவு ஆரம்பிக்கப்படக்கூடாது என்னும் கோரிக்கை ஜனாதிபதி மட்டத்தில் விடுக்கப்பட்டிருந்தது.

தேர்தல் முடிந்ததும் அரச அதிபர் பிரிவு அமைக்கப்படும் என அரசாங்க மட்டத்திலிருந்து தமிழர் மகாசங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் பின்னர் தமிழர்களுக்கென தனியான உதவி அரச அதிபர் பிரிவு அமைக்க முடியாது என்றும், முஸ்லிம்களை உள்ளடக்கிய மூன்று உதவி அரச அதிபர் பிரிவு அமைக்கப்படும் என்றும் அம்பாறை மாவட்ட அரச அதிபர் திரு. டீ. எம். நந்தசேன கல்முனை உதவி அரச அதிபர் ஜனாப். எச். எச், முயினுடினுக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

இதனை ஆட்சேபித்தே ஆர்ப்பாட்ட ஊர்வலமும், மறியல் போராட்டமும் நடத்தப்பட்டன.

இப்போராட்டத்தைத் தொடர்ந்து கல்முனையில் கடைகள் அடைக்கப்பட்டன. வாகனங்கள் போக்குவரத்து நிறுத்தப்பட்டன. (இ-84)

## வலைகளை காணோம்

குருநகர், மார்ச் 14

இராணுவ பாதுகாப்புப் பிரதேசமாகிய கடலில் இருல் மீன்பிடிக்கக் கம்பு போடப்பட்டிருந்த வலைகள் அகற்றப்பட்டிருந்தன.

இச்சம்பவம் யாழ் - பண்ணை வீதி கிழக்குப் பகுதிக்கடலில் நடைபெற்றது. (இ- 15)

# அன்பகம் ஆச்சிரம வளர்ச்சி பாராட்டுக்குரியது

### எழுத்தாளர் பட்டறை நிகழ்ச்சியில் உரை

குருநகர், மார்ச் 14

பழைய பூங்காவீதியில் இருபத்தைந்து பிள்ளைகளுடன் ஆரம்பமாகிய இந்த 'அன்பகம்' அனாதைப் பிள்ளைகளின் ஆச்சிரமம் இன்று 55 அல்லது 60 பிள்ளைகளைக் கொண்டதாக இயங்கி வருகிறது இதன் வளர்ச்சி பாராட்டுக்குரியது,

அரியாலை கிழக்கில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட 'அன்பகம்' அனாதைப் பிள்ளைகள் இல்லப் பொறுப்பாளர் திரு.யோசெப் வைபவத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் மங்கள விளக்கு ஏற்றி நாடாவை வெட்டி புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

'க்யூடெக் பயிற்சியகத்தில் நான் உளவியல் மஞ்சரி வெளியீட்டாளர்கள் சார்பில் நடைபெற்ற எழுத்தாளர் பட்டறை நிகழ்ச்சிக்கு வந்த பத்திரிகையாளர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்களுக்கு மதிய உணவு அரியாலை அன்பக அனாதை இல்லத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

வைபவத்தில் தொடர்ந்து பேசிய திரு. யோசெப் தெரிவித்ததாவது:-

கடந்த காலத்தில் குறிப்பாகக் குடாநாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதத்தில் பெற்றோரை இழந்த சிறுவர் சிறுமிகளே அன்பகத்தில் அதிக பட்சம் பராமரிப்பில் உள்ளனர்,

அவர்களுக்கு வேண்டியது அன்புடன் கூடிய அரவணைப்புத்தான். தாயன்பு, சகோதர பாசம், தகப்பனாரின் மேற்பார்வை என்பவற்றை இழந்துள்ள இவர்களுக்கு தேவையானது அன்பான வழிநடத்தல் தான்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் பேசுகையில்:-

''இந்த அன்பக அனாதை இல்லம் சிறப்பாக நடைபெற்று வருவதைக் காணும் போது திருப்தி ஏற்படுகிறது.

இங்கே பராமரிப்பில் உள்ள சிறார்கள் இப்பொழுது அனாதை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள போதும் எதிர்காலத்தில் உயர் அந்தஸ்தை அடைந்து அந்த நிலைக்கு முற்றுப் புள்ளியிடுவார்கள்.

இங்கே தலைவர் குறிப்பிட்டது போன்று அரச அதிபர் பதவிக்கான நியமனக் கடிதம் இதுவரை எனக்குக் கிடைக்கவில்லை.

அப்படிக் கிடைக்கும் பட்சத்தில் இந்த அனாதைஇல்லப் பொறுப்பாளர் திரு.யோசெப் அவர்களுக்கு அதனை நன்றி அறிதலோடு தெரிவிப்பேன்'' என்றார். (இ-5)

# மாணவிகளின் உற்சாகத்தை பொருட்காட்சி காட்டுகிறது

### கல்வி அதிகாரி உரை

''அண்மைக்கால அசம்பாவிதங்களால் இயந்திரங்கள் பாதிப்படைந்திருந்த நிலையிலும் கூட சிறப்பான முறையில் உடை அலங்காரப் பொருள்களையும், கைப்பணிப் பொருள்களையும் உருவாக்கி இந்தப் பொருட்காட்சியை நேர்த்தியாக நடத்தியமை இங்கு பயிற்சி பெற்ற மாணவிகளின் உற்சாகத்தையும் விடாமுயற்சியையும் காட்டுகின்றது.

இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இரண்டுநாள் கைப்பணி, உடை அமைத்தல் பொருட்காட்சிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் இவ்வாறு கூறினார். (க- 90)

# அச்சுவேலி எரிபொருள் நிலையம் இன்னும் மூடப்பட்ட நிலையில்

அச்சுவேலி, மார்ச் 14

அச்சுவேலி எரிபொருள்கள் நிரப்பு நிலையம் கடந்த பல வாரங்களாக மூடப்பட்டு உள்ளது.

முன்பு தனியார் நிர்வாகத்தில் இயங்கி வந்த அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையம் இரண்டு மாதங்களுக்கு முன்னர் வலி-கிழக்கு வடபகுதி அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ச-11)

# அதிகரிப்பு கிடைக்கவில்லை ஒய்வூதியருக்கு ஏமாற்றம்

சுன்னாகம், மார்ச் 14

இளைப்பாற்று சம்பளம் பெறுபவர்களுக்கு வழங்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்ட அதிகரித்த தொகை வழங்கப்படாமல் இழுத்தடிப்பு நிலையில் இருப்பதாகக் குறை தெரிவிக்கப்படுகிறது.

புதிய சம்பளத்திட்டத்தின் பிரகாரம் அரசாங்க, கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்கு கூடுதல் வேதனம் வழங்கப்படுவது தெரிந்ததே.

கூடுதல் வேதனம் அறிவிக்கப்பட்டபோது இளைப்பாறிய நிலையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கும் கணிசமான தொகை அதிகரிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பல மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் ஒய்வூதியம் பெறுவோர் பலர் எதுவித அனுகூலமும் கிடையாத நிலையிலுள்ளனர். (க-27)

## கால்நடை கணக்கெடுப்பு

தாளையடி, மார்ச். 14

வடமராட்சி கிழக்கில்உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்களை வடமராட்சி கால்நடை வைத்தியர் அப்பகுதியில் உள்ள பயிர்ச்செய்கை உத்தியோகத்தரிடம் கோரியுள்ளார்.

கால்நடைகளுக்கு அண்மைக்காலத்தில் நோய் ஏற்பட்டதை அடுத்தே தடுப்பூசி மருந்து ஏற்ற விவரங்கள் கோரப்பட்டுள்ளன. (ஒ-144)

## திருத்தல பாத யாத்திரை

சாவகச்சேரி, மார்ச் 14

சாவகச்சேரி திவ்ய ஜீவன சங்கம் தென்மராட்சி திருத்தல பாதயாத்திரையை ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பிக்க இருக்கிறது.

சங்கத்தலைவர் ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா தலைமையில் மூன்று வார காலத்துக்குத் தொடரும் பாதயாத்திரைக் கோஷ்டி சுமார் 250 திருத்தலங்களைத் தரிசிக்கும். ([illegible])


கரைச்சிப் பிரதேச சபை, 1989 ஆம் ஆண்டுக்கான

## கேள்வி அறிவித்தல்

01-04-1989 ஆந் திகதி தொடக்கம் 31-12-1989 ஆந் திகதி வரைக்கான காலப்பகுதிக்கு கீழ்க் குறிப்பிட்டிருக்கும் குத்தகைகள் சார்பில் கேள்விகள் 29-04-1989 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் 27-04-1989 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் கீழ்க்குறிப்பிடும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணத்தையும் படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் ''விசேட ஆணையாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை

| குத்தகை விபரம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| கிளி/சந்தைமாட்டிறைச்சிக்கடை இல. 1. | 45,000/- | 500/- | 50/- |
| கிளி/சந்தை மா. இறை. கடை இல. 2. | 48,750/- | 500/- | 50/- |
| கிளி/சந்தை ஆட். இறை. கடை இல. 1. | 22,500/- | 500/- | 50/- |
| கிளி/பரந்தன் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 22,500/- | 500/- | 50/- |
| பரந்தன் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 1,000/- | 100/- | 25/- |
| முரசுமோட்டைச் சந்தை | 2,250/- | 100/- | 25/- |
| ஆனையிறவுச்சந்தை | 100/- | — | 25/- |
| கண்டாவளை | 100/- | — | 25/- |
| தருமபுரம் | 1,000/- | 100/- | 25/- |
| ஸ்கந்தபுரம் சந்தை | 1,000/- | 100/- | 25/- |
| வட்டக்கச்சி | 6,000/- | 250/- | 25/- |
| **இறைச்சிக்கடைகள்:** | | | |
| முரசுமோட்டை மாட்டிறைச்சிக்கடை | 1,000/- | 250/- | 25/- |
| " " " இமைல் | 2,000/- | 250/- | 25/- |
| ஆனையிறவு " " | 1,000/- | 250/- | 25/- |
| ஸ்கந்தபுரம் " " | 1,000/- | 250/- | 25/- |
| வட்டக்கச்சி " " | 10,200/- | 500/- | 25/- |
| இரணைமடுச் சந்தி " | 5,000/- | 500/- | 25/- |
| கனகபுரம் | 5,000/- | 500/- | 25/- |
| திருநகர் | 3,500/- | 250/- | 25/- |

சு. வேலுப்பிள்ளை,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

[C-1884]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை ஒழிப்புத் திட்டம் வெற்றிபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

நெடுந்தீவு, மார்ச். 14

வறுமை ஒழிப்புத் திட்டத்தின் மூலம் நாட்டில் எல்லா மக்களும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை மேற்கொள்ள ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இந்தத் திட்டம் வெற்றிபெற நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். ஏனெனில் இது மக்களின் மறுமலர்ச்சிக்கான ஒரு திட்டம்.

வறுமை ஒழிப்புத் திட்டம் குறித்த கருத்தரங்கில் உரையாற்றிய பொது நிலையினர் கழகத்தலைவர் திரு. அ. வெ. அரியநாயகம் இவ்வாறு கூறினார்.

திரு. கேதீஸ்வரன், கிராம சேவகர் திரு. ந. நடராசா உட்பட பலர் கருத்துரை வழங்கினார்கள். (க-111)


**NIRU TUITION CENTRE**

STATION ROAD, KONDAVIL.

புதிய பழைய பாடத்திட்டத்திற்கான

**G. C. E. (A/L) 91**

கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள்

16. 03. 1989 இல்

ஆரம்பமாகின்றன.


| | |
|---|---|
| பௌதிகவியல்: | திரு. சௌந்தி |
| இரசாயனவியல்: | திரு. செல்வா |
| தாவரவியல்: | திரு. பாலா |
| விலங்கியல் | திரு. ஈசன் |
| | திரு. ஞானம் |
| தூய / பிரயோக } கணிதம் | திரு. கிருஷ்ணா |
| கணக்கியல்: | திரு. மரியதாஸ் |
| பொருளியல்: | திரு. சின்னத்தம்பி |
| வர்த்தகவியல்: | திரு. தேவா |
| புவியியல்: | திரு. வேலா |
| அரசியல்: | திரு. மஃறூப் |
| அளவையியல்; | திரு. S S. மனோகரன் |
| இந்து நாகரிகம்: | திருமதி அருள்நங்கை |
| தமிழ்: | திரு. குழந்தை |
| வரலாறு: | பிரபல ஆசிரியர். |

மேலதிக விபரங்களுக்கு:

நிர்வாகி.

( /1862)


## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் தம்பையா சோதிலிங்கம்**

(நட்டாங்கண்டல்)

(முன்னைநாள் கிராமோதய சபைத்தலைவரும் சமாதான நீதிவானும் (J. P.))

● மடியிலே மலராய்: 20 – 12 – 1951 ● மண்ணிலே உரமாய்: 24 – 03 – 1988

திதி: 14 — 03 — 1989

ஓராண்டு கழிந்தாலும்
அகிலமே அழிந்திடினும்
நூறாண்டு சென்றாலும் மாறாது எம் துயரம்
மரணம் நிச்சயமே மறக்கத்தான் முடியாதே
தருணம் இதுவல்ல தவிக்கின்றோம்
உன் நினைவால்
திண் தோள் வலிவேந்தே!
திறன் மிக்க வீமனே!
தூண்டாமணி விளக்கே!
துணிவின் குலவேந்தே!
கட்டுக் கோபுரமே கம்பீரமன்மதனே!
கண்ணீர்க் கடலில் கதறவிட்டு
நீண்ட துயில் கொண்டதேனோ?
பருவத்துடிப்பும் பண்பான வார்த்தைகளும்
கம்பீரத் தோற்றமும் கண் நிறைந்து நிற்குதையா!
இமயமலை சரிந்ததையா!
இதயங்கள் வெடிக்குதையா!
எப்பிறவி எடுத்தாலும் எங்கே நாம் சென்றாலும்
இப்பிறப்பில் உம் நினைவை
எப்படித்தான் மறப்போமோ?

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
தங்கள் நினைவால் உயிர் வாழும்:

அன்பு அப்பா, மனைவி,
பிள்ளைகள், சகோதரங்கள்,
மாமா, மாமி.

நட்டாங்கண்டல்,
மாங்குளம். [9996]

# திடீரென வந்த மழை! மாம்பூக்கள் உதிர்வு!

## உற்பத்திவீழ்ச்சி அடையலாம்

சுன்னாகம், மார்ச் 14

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணப் பகுதியில் பெய்த திடீர் மழையினால் மாமரங்களே பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

மழையினால்பூக்கள் உதிர்ந்து விட்டதாக தோட்டக்காரர்களும் பாமர உரிமையாளர்களும் தெரிவிக்கின்றனர். மாம்பழ உற்பத்தி இம்முறை இதனால் வீழ்ச்சி அடையலாம் என்று அஞ்சப்படுகிறது.

முற்றிலும் எதிர்பாராத இந்த மழையினால் இணுவில், உடுவில், பகுதிகளில் அறுவடைக்குத் தயாராக இருந்த புகையிலைச் செடிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

பூத்த நிலையில் இருந்த முருங்கை மரங்களும் பாதிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. (இ-27)

## அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், மார்ச். 14

எமது கிராம மக்கள் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குரிய காலமாக இந்த மாதத்தையும் அடுத்த மாதத்தையும் கருதுவதால் அதற்குரிய விதை, உரம், கிருமிநாசினி, விவசாய உபகரணங்கள் ஆகியவற்றை உடனடியாக வாங்க வேண்டியுள்ளது ஆகவே எமது வாழ்வை புனரமைக்க உதவியாக தொழில் முயற்சிக்கான நிவாரணத்தையும் மீளக்குடியமர்த்தல் நிவாரணத்தையும் உடனடியாக எமக்கு வழங்க ஆவன செய்க.

கோப்பாய் விவசாயிகள் கழகம் யாழ் அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் முன்கண்டவாறுதெரிவித்துள்ளது.

மகஜரில் மேலும் கூறப்படுவதாவது;

விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்ட உரும்பராய், ஊரெழு, கோப்பாய் வடக்கு, அச்சுவேலி, பத்தமேனி, இடைக்காடு ஆகிய கிராமங்கள் இலங்கை இந்திய இராணுவ நடவடிக்கைகளினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்திலுள்ள வேறு பகுதிகளுக்குத் தொழில் முயற்சிக்கான நிவாரணம் வழங்கப்படுவதாக அறிகிறோம். ஆகவே எமக்குரிய நிவாரணங்களைக் கூடிய கெதியில் வழங்குமாறு கேட்கின்றோம்

இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது. (ச)

## பேராதனைக்கு 127 பேர்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இந்த வருடம் தமிழ் மூலம் கல்வி பயில 127 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 125 பேர் முஸ்லிம்கள்; 2 பேர் தமிழர்கள்.

புதிய மாணவர்கள் தெரிவானவிதம் குறித்து தமிழ் மாணவர் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது. [அ-எ]

## இந்து மகளிரில் சேவைக் கால பயிற்சி வகுப்பு

நல்லூர் - யாழ்ப்பாண வட்டாரத்தில் விவசாய விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இந்து மகளிர் கல்லூரியில் இன்று 14ஆம் திகதி சேவைக்காலப்பயிற்சிவகுப்புக்கள் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை ஆசிரிய ஆலோசகர் திருமதி எஸ். துரைராஜா மேற்கொண்டுள்ளார். (இ)

## மணற்காடு முத்துமாரி மகோற்சவம்

காரைநகர், மார்ச் 14

காரைநகர் மணற்காடு முத்துமாரிஅன்னையின்மகோற்சவம் 22 ஆம் திகதி புதன்கிழமை பகல் 11.00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (இ-73)

## ஸ்ரீ வராகி அம்பாள் கொடியேற்றம்

மானிப்பாய், மார்ச். 14

கொக்குவில் மேற்கு கள்ளிக்கொக்கான் ஸ்ரீ வராகி அம்பாள் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் ஆலய பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ க. குகதாசக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறுகிறது.

ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி கொடியேற்ற மகோற்சவம் ஆரம்பமாகி வருடப்பிறப்பு தினத்தன்று இரததோற்சவமும் நடைபெறும். (ச-90)

## சிவயோக சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம், மார்ச் 14

சிவயோக சுவாமிகளின் குருபூசை 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் நடைபெறும்.

ஆரம்ப சாதனையாக 16, 17,18 ஆகிய முதல் மூன்று தினங்களிலும் ஆச்சிரம வாழ்வு விரதம் அனுஷ்டிக்கப்பட்டு நற்சிந்தனை முற்றோதல் நடைபெறும். (இ)


**பேக்கறி வாடகைக்கு**

இடம்:- சுன்னாகம் K.K.S. வீதி.

சுற்றாடல்:- வியாபார நிலையங்கள், அமைதி விரும்பிகளின் இல்லங்கள் அமைந்த புனித சுற்றாடல்.

இயங்கிவரும் காலம்:- 30 வருடத்திற்கு மேற்பட்ட தொடர்ச்சியாக இயங்கி திருப்திகரமான வளர்ச்சி

சுற்றாடலின் தன்மையை முன்னிட்டு நற்பண்பு உடையோர் கீழ்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

மா. தேவராசா

''சாயி கிருசம்''

மைலணி வீதி, (K.K.S. வீதியிலிருந்து இடதுபக்க முதலாவது வீடு.)

சுன்னாகம். (C/1887)



வர்த்தகர்கள். வாடிக்கையாளர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

**தோலகட்டி நெல்லிரசம்**

எமது தயாரிப்பான தோலகட்டி நெல்லிரசம் இப்போது புதியவர்ண லேபலுடனும், சிவப்பு நிற மூடியில் வெள்ளை எழுத்தில் Tholagatty Products என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டும் வெளிவந்துள்ளது. எனவே இனியும் போலிகளைக் கண்டு ஏமாற வேண்டாம்.

விபரங்களுக்கு:

இயக்குநர்
செபமாலைதாசர் ஆச்சிரம்
தோலகட்டி,
வசாவிளான்.

இயக்குநர்
அருள் ஆச்சிரம்,
5, ரெம்பிள் றோட்,
யாழ்ப்பாணம்.

(9832)



**DIPLOMA IN HOTEL MANAGEMENT**

4 MONTHS

WEEKDAY CLASSES

ஆரம்பம்: 21 03 1989

இத்துறையில் தகைமையும் அனுபவமுமுள்ள விரிவுரையாளர் குழு

Fees — மாதம் 250/- மட்டுமே

அச்சடித்த பாடக் குறிப்புகள் FREE.
பிரபல HOTEL களில் செய்முறைப் பயிற்சி.
பயிற்சி முடிவில் சான்றிதழ்

வெளி நாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற மிக உகந்தது

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3 ஆம் குறுக்கு வீதி,
[O L R தேவாலய மேற்குப் பக்கம்]
யாழ்ப்பாணம்.

(C/1885)


# சொந்த நாட்டில் இருந்து கொண்டே அதன் உயர்ச்சிக்கு உழையுங்கள்

யாழ்ப்பாணம், மார்ச். 14

உலகில் பரந்து வாழுகின்ற யூத இனத்துக்கு அடுத்தபடியாகத் தமிழர்கள் உலகெங்கும் பரந்து வாழுகின்றனர். வெளிநாடுகளுக்குச் சென்று கையேந்துவதை விட்டு சொந்த நாட்டில் இருந்து எமது நாட்டின் உயர்ச்சிக்கு உழைக்க வேண்டும். கிராமம் வளர்ச்சி அடையும் பொழுதுதான் நாடு வளர்ச்சி அடையும்'.

வேலணை மங்களம் தனியார் கல்வி நிறுவனத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து உரையாற்றுகையில் யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட புவியியல் துறை விரிவுரையாளர் திரு. செ. பாலச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிரியர் திரு. அருணகிரிநாதன் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

திரு. பாலச்சந்திரன் தனது உரையில் மேலும் கூறியதாவது: 'கல்வி கற்று பட்டதாரிகளாக வருவது மட்டும் மாணவர்களின் குறிக்கோளாக இருக்கக் கூடாது.

பிறந்த மண்ணுக்குச்சேவை செய்ய வேண்டுமென்ற மனப் பக்குவத்தைஅவர்கள் அடைய வேண்டும் எனக் கூறினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. குகபாலன் பேசுகையில்: சென்ற பத்து ஆண்டுகளில் 19,000 மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகி உள்ளனர்.

இதில் தீவுப்பகுதி மாணவர்கள் அதிகமாக உள்ளனர்.

தீவுப்பகுதியில் அறுபதுகளின் முன்பிருந்த கல்வி வளர்ச்சி அறுபதுகளின் பின் வீழ்ச்சி அடையத் தொடங்கியுள்ளது.

மாணவர்கள் மத்தியில் மனச் சோர்வும், மாணவர்கள் வெளிநாடு சென்றமையும் வியாபாரத்தில் ஈடுபட்டமையுமே இதற்கான முக்கிய காரணங்களாகும்.

அத்துடன் பாடசாலைகளில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறையும் மாணவர்கள் தமது படிப்பை இடை நிறுத்தம் செய்தமைக்குக் காரணமாகக் கொள்ளலாம்.

இப்படி அவர் கூறினார்.

திருவாளர்கள் த. ம. சுந்தரலிங்கம், தருமராசா ஆகியோரும் உரையாற்றினர்.

திருமதி செ. பாலச்சந்திரன் பரிசில்களை வழங்கினர். (ச)

# சனசமூக நிலையங்கள் மக்களை ஒன்றிணைக்கும் பாலம் ஆகும்

அரியாலை, மார்ச். 14

''இன்றைய நெருக்கடியான நிலையில் சன சமூக நிலையங்கள் பொது மக்களையும் சன சமூக நிலையங்களையும் ஒன்றிணைக்கும் பாலமாகச் செயற்பட வேண்டும்''

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் இயங்கும் அனைத்து சனசமூக நிலையங்களின் சமாச அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றுகையில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஆ. இரகுநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு இரகுநாதன் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது: உண்மையான கிராம வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய சக்தியும் அதனைக் கண்டறிந்து அரசுக்குத் [illegible] வேண்டிய பொறுப்பும் சன சமூக நிலையங்களையே சாரும். அப்பணியை நாம் திறம்பட நிறைவேற்ற வேண்டும் எனக் கூறினார்.

இக் கூட்டத்துக்குச் சிறப்பு விருந்தினராக காங்கேசன்துறை பிரதேச சபையின் விசேட ஆணையாளரான திரு. பொ. பாலசிங்கம் கலந்து கொண்டார்.

திரு. பாலசிங்கம் சன சமூக நிலையங்கள் எவ்வாறு தமக்குரிய நிதிகளைச் சேகரித்துக் கொள்ளலாம் என விளக்கமளித்தார்.

உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த திருமதி பாஸ்கரன் யாழ் மாவட்ட சன சமூக நிலைய ஒன்றியச் செய [illegible] திரு. இ. தவகோபால் ஆகி[illegible] (ச-ரி)


**விக்னா டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்குத் தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)

O/L **DAY CLASSES** (OLD, NEW SYLLABUS) (8.30 – 1.30)
**EVENING CLASSES** (3.00 - 5.00)

ஆண்டுகள்: 10, 9, 8, 7, 6ஆம்

புதிய பிரிவு ஆரம்பம்:- 15 - 03 - 89.

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:-

விஞ்ஞானம் - திரு. சூரி    ஆங்கிலம் - திரு விஸ்வநாதன்
கணிதம் - திரு. செல்வா    சமூகக்கல்வி - திரு. கருணாகரன்
திரு. சுந்தரமூர்த்தி
தமிழ், சமயம் - திரு: திருப்பதி

மு. கு:- கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றுடன் செயற்படும் ஒரே நிறுவனம்.

[C/1850


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:-**

ஒன்றாமை ஒன்றியா கட்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது.

**பொருள்:-**

ஒன்றேபோல் சேர்ந்திருக்கின்றவர்களுக்குள் உட்பகை வந்து நாசமில்லாமல் இருப்பது ஒரு நாளும் முடியாது.

**உதயன்**

இல. 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24805 22078
14.03.1989
த.பெ.இல23

## அபிவிருத்தியும் அடைமொழிகளும்

கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லைப் பிரதேசங்களில் வாழும் மக்களின் போக்குவரத்துக் கஷ்டங்கள் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன!

கிளிநொச்சி மிகப்புதிய மாவட்டம். ஒரு காலத்தில் வசதி குறைந்த பகுதியாக, மிகவும் பின்தங்கிய குடியேற்றப் பிரதேசமாக விளங்கி, இப்போதுதான் முன்னேற்றம் கண்டு, வளர்ச்சி கண்டு வருகிறது.

அந்த மாவட்டத்தின் மேற்கு எல்லைப்பகுதிகளாக விளங்கும் இரணைதீவு, வலைப்பாடு, வேரவில், கிராஞ்சி, பொன்னாவெளி, பாலாவி ஆகிய கிராமங்கள் இன்னமும் கஷ்டப்பிரதேசங்களாகவே இருக்கின்றன.

அவை குடியேற்றக் கிராமங்களாக ஆரம்பிக்கப்பட்ட போதிருந்த வசதிகளே அனேகமாக இப்போதும் உள்ளன. புதிதாக வசதிகள் செய்யப்பட்டது மிகக் குறைவு. ஏற்கனவே இருந்த வசதிகளில் பலவற்றையும் இப்போது இழந்து போன நிலையில் மக்கள் கஷ்டப்படுகிறார்கள்.

விவசாயமும், மீன்பிடியும் சரிக்குச் சரி வளரும் இப்பிரதேசத்து மக்கள் பல வகைகளாலும் பின் தள்ளப்பட்டிருக்கிறார்கள். பல வசதிகளை இழந்து இன்னற்படுகிறார்கள். அவ்வாறு இழந்துபோன வசதிகளில் பிரதானமானது போக்குவரத்து.

ஒரு பகுதியின், அப்பகுதி மக்களின் மிகமிக அடிப்படைத் தேவை போக்குவரத்து. அந்த வசதி உரிய வகையில், போதிய அளவில் இல்லாவிட்டால் மக்களின் வாழ்க்கை பல வகைகளாலும், பல துறைகளிலும் பாதிக்கப்படும். ஒரு கிராமத்து மக்களின் பொருளாதார, கல்வி, சமூக வளர்ச்சிக்கான அத்திவாரக் கற்களில் போக்குவரத்தும் ஒன்றே.

ஆனால் கிளிநொச்சியின் கஷ்டப்பிரதேசங்களாகவே தொடர்ந்து விளங்கிவரும் இரணைதீவு முதல் பாலாவி வரையான கிராமங்களில் வாழும் மக்களுக்குக் கடந்த நான்கு வருடங்களாகப் போக்குவரத்து என்பது கானல் நீராகவே தெரிகிறது.

கிளிநொச்சிக்கும் கிராஞ்சிக்கும் இடையில் நடைபெற்று வந்த பஸ்சேவை 1984 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. அதனை மீள ஆரம்பிப்பது குறித்து இன்னும் எவ்வித நடவடிக்கையோ, தகவலோ இல்லை என்று அப்பிரதேச மக்கள் குறைப்படுகிறார்கள்.

சம்பந்தப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தங்கள் அன்றாடத் தேவைகளுக்காக கிளிநொச்சி வருவதற்கு எட்டு மைல்கள் நடக்கவேண்டி உள்ளது! அதனால் அவர்கள் எத்தனையோ கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். பொருட்சேதம், உடற்சிரமம், நேர விரயம் என்று பல அசௌகரியங்களையும் அவர்கள் சுமக்க வேண்டி உள்ளது.

பின்தங்கிய பகுதிகள், கஷ்டப் பிரதேசங்கள் தொடர்ந்தும் அந்த அடைமொழிகளைத் தாங்கிக் கொண்டிருக்கக்கூடாது; அவை அகற்றப்படவேண்டும். அதற்கு மாறாக அடைமொழிகள் நிலைத்தால், தமிழ்ப் பகுதிகளை அபிவிருத்தி செய்யும் பணியில் நிச்சயம் தோல்வியே ஏற்படும்.

பின்தங்கிய பகுதிகளும், கஷ்டப்பிரதேசங்களும், முன்னுரிமை அடிப்படையில் முன்னேற்றப்பட வேண்டும். அப்பகுதி மக்களின் கஷ்டங்கள், பிரச்சினைகள் பாகுபாடு இன்றி, நேரான கண்ணோட்டத்துடன் நோக்கப்பட்டு, இனங்காணப்பட்டு தேவையான வசதிகள் செய்யப்பட வேண்டும்.

பணத்துக்கு மேல் பணம் சேர்ப்பது போல, வளர்ச்சி கண்ட — வசதிகள் உள்ள — பிரதேசங்களுக்கே மேலும் வசதிகளைப் பெருக்குவதைவிட, கஷ்டப் பிரதேசங்கள், பின்தங்கிய பகுதிகளுக்கு அபிவிருத்தியில் முதலிடம் அளிப்பது அவசியம். இதனை அரசும், அதிகாரிகளும் மறந்துவிடக்கூடாது.

### சென்னை

## ஓட்டோ சங்கர் வழக்கு மார்ச் 20 முதல் விசாரணை

சென்னை, மார்ச். 13

தமிழ்நாட்டைக் கலக்கிய ஓட்டோ சங்கர் வழக்கு விசாரணை வருகிற 20ஆம் திகதியில் இருந்து ஆரம்பமாகிறது.

தமிழக அரசியல்வாதிகள் நடிகைகள், பொலீஸ் அதிகாரிகள் பலரும் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் இவ்வழக்கு விசாரணை அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

லலிதா, ரவி, கோவிந்தராஜ், சம்பத். மோகன் ஆகிய 5 பேர்களைக் கொன்று திருவான்மியூர், பெரியார் நகரில் உள்ள வீடு ஒன்றில் புதைக்கப்பட்டனர். இது தொடர்பாக பெரியார் நகரைச் சேர்ந்த ஓட்டோ சங்கர், அவருடைய தம்பி, மைத்துனர் உட்பட 11பேர்மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஓட்டோ சங்கர் சார்பில் பெண் சட்டத்தரணி செல்வி விஜயராதா ஆஜராகிறார்.

## போலந்தில் அரசியல் சீர்திருத்தம்
## ஜனநாயக தேர்தல் வருகிற ஜூனில்

வார்ஸோ, மார்ச். 13

முழு அளவிலான அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ள போலந்து கம்யூனிஸ்ட் அரசு சம்மதித்து உள்ளது.

ஜனநாயகமுறையில் தெரிவு செய்யப்பட்ட செனட் சபை, மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி முறை ஆகியவற்றைக் கொண்டதாக புதிய அரசியல் சீர்திருத்தம் அமையும்.

இதன் மூலம் ஜனநாயக உரிமைகள் கோரி கிளர்ச்சி நடத்தி வரும் சொலிடாரிட்டி தொழிற்சங்கம் நாடாளுமன்ற அரசியலில் பங்கு பற்றும் வாய்ப்பு அதிகரித்து இருக்கிறது.

கடந்த வியாழன் புதிய சீர்திருத்தம் பற்றிய விவரம் அறிவிக்கப்பட்டது.

இதன் மூலம் போலந்தை சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கடியில் இருந்து காப்பாற்ற முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய மாற்றங்கள் பற்றி சொலிடாரிட்டி தொழிற் சங்கத்தின் சிரேஷ்ட ஆலோசகர் ஜாக்குரோன் சொன்னதாவது;

ஜனநாயக பாதையில் ஓர் அடி முன்னே வைத்து உள்ளோம்.

ஒரு கட்சி அரசியல் முறையில் இருந்து விடுபட்டுள்ளோம்.

இப்படி அவர் சொன்னார்.

புதிய சீர்திருத்தத்தின் கீழ் நாடாளுமன்றத்தின் இரு சபைகளுக்குமான தேர்தல்கள் வருகிற ஜூன் மாதம் நடைபெறும்.

இத் தேர்தல்களில் சொலிடாரிட்டி தொழிற் சங்கமும் பங்குபற்றும். (எ)

## மருங்காபுரி, மதுரை கிழக்கு அ.தி.மு.க. கைப்பற்றியது

சென்னை, மார்ச் 13

தமிழ்நாடு சட்டசபைத் தொகுதிகள் மருங்காபுரியிலும் மதுரை கிழக்கிலும் நடந்த தேர்தல்களில் அ.தி.மு.க. வேட்பாளர்களே வெற்றியீட்டினர்.

தேர்தல் முடிவு விவரங்கள் வருமாறு:

**மதுரை கிழக்கு**

எஸ். ஆர், ராதா - 40,519 (அ.தி.மு.க.)
எம். சங்கரய்யா - 27.196 (மார். கம்யூனிஸ்ட்)
எம். கே. ராமகிருஷ்ணன் 12,778 (இந்திரா காங்கிரஸ்)

**மருங்காபுரி**

கே. பொன்னுச்சாமி- 55,002 (அ.தி.மு.க.)
புலவர் செங்குட்டுவன்- (தி.மு.க.) 43,964
துரை செபஸ்டியன் -8,928 (இ. காங்கிரஸ்)

இந்த முடிவுகளினால் தமிழ்நாடு சட்டசபையினால் அ.தி.மு.க. வின் பலம் 28 ஆக உயர்ந்தது. (எ)

## வெள்ளிவிழா கொண்டாடிய வீரப்பக் கவுண்டர்

சென்னை, மார்ச் 13

வீரப்பக்கவுண்டர் தனது தேர்தல் வெள்ளிவிழாவை மருங்காபுரித் தொகுதியில் கொண்டாடினார்.

கடந்த ஜனவரி தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் 8 தொகுதிகளில் ஒரே சமயத்தில் போட்டியிட்டவர் வீரப்பக் கவுண்டர். அனைத்திலும் கட்டுப்பணத்தை இழந்தார்.

ஆனால் 24 தேர்தல்களைச் சந்தித்தவர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

மருங்காபுரி இடைத் தேர்தல் வந்தது. தனது தேர்தல் வெள்ளிவிழாவை பிரதமர் ராஜீவுடன் போட்டியிட்டு கொண்டாட முன்னர் நினைத்திருந்த வீரப்பக்கவுண்டர் மனம்மாறி, மருங்காபுரியில் கொண்டாடத் தீர்மானித்தார்.

வெள்ளி விழாத் தேர்தலிலாவது வெற்றி வாய்ப்பைத் தர ஏனைய கட்சிகள் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று அவர் விண்ணப்பித்துக்கொண்டார். ஆனால் கட்சிகள் வேண்டுகோளை ஏற்கவில்லை.

ஆனாலும் அவர் போட்டியிட்டு மண்கௌவினார். கட்டுப்பணத்தை இழந்த வேட்பாளர்களில் அவரும் ஒருவரானார். (எ-4)

### தென் ஆபிரிக்கா

## பதவியை இராஜினாமாசெய்ய ஜனாதிபதி போத்தா மறுப்பு

கேப்டவுன், மார்ச். 13

தென் ஆபிரிக்க ஜனாதிபதி திரு. போத்தா தனது பதவிக் காலம் முடியும்வரை ஆட்சி நடத்துவார்.

அதற்கு இடையில் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகப் போவதில்லை என்று திரு. போத்தா அறிவித்தார். திரு. போத்தா சில மாதங்களுக்கு முன்னர் மாரடைப்பு நோய்க்கு ஆளானார்.

அதைத் தொடர்ந்து ஆளும் கட்சியின் தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்தார். பதில் ஜனாதிபதி ஒருவரை நியமித்தார்.

சுகப்பட்டு மீண்டும் ஜனாதிபதிக் கடமைகளை ஏற்ற அவரை நிரந்தரமாக ஓய்வு எடுக்கும்படி ஆளும் கட்சி உறுப்பினர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

திரு. போத்தா அதற்கு மறுத்து விட்டார்.

1990 மார்ச்சில் தனது பதவிக்காலம் முடியும்வரை பதவியில் இருக்கப் போவதாக அவர் அறிவித்திருக்கிறார். (எ)

## 4 குழந்தைகள் கருகி மரணம்

சென்னை, மார்ச் 13

சென்னை, அமைந்தகரை அருகில் உள்ள சாந்தி கொலனியில் நேற்று ஏற்பட்ட தீவிபத்தில் நான்கு குழந்தைகள் கருகி மாண்டனர்.

சுமார் 100 குடிசைகள் தீக்கிரையாகின.

எப்படித் தீ [illegible] என்பது தெரியவில்லை (எ)

## நடிகை ராணி பத்மினி கொலை வழக்கு விசாரணை

செங்கல்பட்டு, மார்ச் 13

நடிகை ராணி பத்மினி கொலை வழக்கில் எதிரிகளில் ஒருவரான ஜெயராஜ் கடந்த வாரம் சாட்சியமளித்தார்.

ராணி பத்மினியின் கார்ச் சாரதியாக ஜெயராஜ் பணியாற்றி வந்தார்.

ராணி பத்மினியையும் அவரது தாயார் இந்திரா குமாரியையும் 1986 ஆம் ஆண்டு கொலைசெய்ததாக ஜெயராஜ், காவலாளி லட்சுமி நரசிம்மன், சமையல்காரர் கணேசன் ஆகியோர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடக்கிறது. ஜெயராஜ் சட்சியமளிக்கையில், ராணிபத்மினி, அவரது தாயார்-ஆகியோரை நான் [illegible] கும் இந்தக் கொலைகளுக்கும் சம்பந்தமே இல்லை'' என்று சொன்னார்.

ஏனைய இரண்டு எதிரிகளும் இதே மாதிரியான சாட்சியத்தையே அளித்தனர். (எ)

## 1 லட்சம் டாலர் விலை போன 'மிக்கி மௌஸ்' சித்திரம்

வால்ட்டிஸ்னியின் கையெழுத்தைக் கொண்ட மிக்கி மௌஸின் சித்திரம் ஒன்று ஒரு இலட்சத்து 10 ஆயிரம் டாலருக்கு விற்கப்பட்டது.

அந்தச் சித்திரத்தில் ''மிக்கி மௌஸினதும் வால்ட்டிஸ்னியினதும் வாழ்த்துக்கள்'' என்று எழுதப்பட்டிருந்தது.

இச்சித்திரம் 20 அங்குல நீளமும், 16 அங்குல அகலமும் கொண்டது. (எ)

## இடிவிழுந்து மூவர் பலி

வடஆற்காடு மாவட்டத்தில் மூவர் இடி விழுந்ததில் உயிரிழந்தனர்.

வீராணம் என்னுமிடத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்களே மரணமானவர்கள். இரண்டுபேர் அந்த இடத்தில் இறந்தனர். (எ)

### ஆப்கனிஸ்தான்

## ஜலலபாத் நகரம் மீது தீவிர ஷெல் தாக்குதல்

ஜலலபாத் நகர் ஆப்கன் கெரில்லாக்களின் தீவிரத்தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் 3 ஆயிரத்துக்கு அதிகமான ஷெல்களால் நகரின் கேந்திரப் பகுதிகளை கெரில்லாக்கள் தாக்கினர்.

தாக்குதல்கள் மோசமடைந்துவருவதன் காரணமாக மக்கள் பெரும் எண்ணிக்கையில் ஜலலபாத் நகரை விட்டு வெளியேறி வருகின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானிய படைகளும் கெரில்லாக்களுடன் சேர்ந்து சண்டை இடுவதாக சோவியத்யூனியன் குற்றஞ்சாட்டி இருந்தது தெரிந்ததே.

ஆப்கன் கெரில்லாக்கள் அமைத்துள்ள இடைக்கால அரசின் செயலகத்தை நிறுவுவதற்காக ஜலலபாத்நகரைக் கைப்பற்றவே கெரில்லாக்கள் சண்டையிடுகின்றனர். (எ)

## சாதனை முயற்சியில் சாவைச் சந்தித்த பெண்!

லண்டன், மார்ச் 13

விமானத்தில் இருந்து 35 ஆவது தடவையாக பாரசூட்டின் மூலம் குதித்து சாதனை புரிய முயற்சித்த 27 வயது இளம் பெண் செல்வி பொண்ட் என்பவர் விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

அவருடன் இம் முயற்சியில் பங்குபற்றிய ஏழுபேர் குறிக்கப்பட்ட இடத்தில் பாரசூட்டில் இருந்து இறங்கினர்.

ஆனால் இவரின் பாரசூட் விமானத்தின் புரொப்பல்லரில் சிக்கியதனால் இவர் விபத்துக்குள்ளாகி மரணமானார்.

இம் மரணம் பற்றி விசாரணை ஒன்றுக்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. (எ)

## இஸ்லாமிய மாநாடு

ரியாத், மார்ச். 13

45 இஸ்லாமிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் வழமையான மாநாடு இன்று சவூதி அரேபிய தலைநகர் ரியாத்தில் ஆரம்பமானது.

இம்மாநாட்டில் 'சாத்தானின் கவிதைகள்' நூல் பற்றிய பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## மாணவர் தலைவர் கொலை

இஸ்லாமாபாத், மார்ச். 13

இரண்டு கோஷ்டிகளுக்கு இடையேயான துப்பாக்கிச் சண்டையில் பாகிஸ்தானிய மாணவர் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டார்.

மாணவர் மன்றத் தலைவராகப் போட்டியின்றித்தெரிவு செய்யப்பட்டதைக் கொண்டாடுமுகமாக ஊர்வலம் ஒன்றுக்கு தலைமை வகிக்கச் சென்றுகொண்டிருந்த மாணவர் தலைவர் சாஹிட் மஹ்மூட் பாலுச்மீது எதிர்க் கோஷ்டி சுட்டது. (எ)

## ராஜதந்திரி வெளியேற்றம்

வாஷிங்டனில் உள்ள சோவியத் தூதரகத்தில் பணியாற்றி வந்த இராணுவ அதிகாரி ஒருவரை அமெரிக்க அரசு வெளியேற்றி விட்டது.

உளவு பார்த்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் அவர் வெளியேற்றப்பட்டார்.

## தமிழரை வாழவைக்கும் எமது பயணம்
## உயிரைப் பணயம் வைத்து நடத்துவோம்

### கருணாநிதி அறிவிப்பு

சென்னை, மார்ச். 13

முதலமைச்சர் கலைஞர் கருணாநிதிக்கு அவர் வெற்றி பெற்ற துறைமுகம் தொகுதியில் அண்மையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

வரவேற்புக்கு பதிலளித்துப் பேசுகையில் கலைஞர் சொன்னதாவது;

உன்னை நாடாளவிட்டால் ஊழல்களை யார் கண்டு பிடிக்கச் சொன்னது என்று கேட்கிறார்கள்.

ஊழலைக் கண்டு பிடிக்கவா உள்ளே அனுப்பினோம் என்று கேட்கிறார்கள்.

ஒரு பெண்ணிடம் பூவைக் கொடுத்து, அம்மா இந்தப் பூவை வைத்துக்கொள் என்றால்- அந்தப் பெண் அதுவரையிலே தலை சீவாமல் இருந்தால், தலைசீவி ஈரும் பேனும் இருந்தால் அதை அகற்றிவிட்டு பூ வைத்துக் கொண்டால்- உன்னை பூ தானே வைத்துக் கொள்ளச் சொன்னேன். உன்னை யார் தலையைச் சீவச் சொன்னது



என்று கேட்பது?

நீண்ட நாட்களாகப் பாழடைந்த வீடு ஒன்றிற்கு குடி போகின்றோம். குடி போனால் சமைக்கலாம், நான்கு பேர் வந்தால் சமைக்கலாம், வருபவர்களை அமரச் செய்யலாம் என்று அதற்கான வசதிகளைச் செய்யும்போது - சுவரிலே நான்கு பொந்துகள் தெரிகின்றன.

பொந்துகளுக்குள் நான்கு பெருச்சாளிகள் இருக்கின்றன என்றால், அந்தப் பெருச்சாளிகளை எல்லாம் விரட்டி விட்டு வீட்டைச் சுத்தப்படுத்துவோம் என்று ஆரம்பித்தால் உன்னை வீட்டிற்குள் குடிதானே போகச் சொன்னோம். உன்னை யார் பெருச்சாளிகளை விரட்டச் சொன்னார்கள் என்று கேட்பது?

**சந்து பொந்து**

எனவே வீட்டிற்குக் குடி போகிறோம். வீடு சுத்தமாக அழகாக இருக்க வேண்டும். நான்குபேர் பார்த்து பாராட்டக்கூடிய அளவிற்கு இருக்க வேண்டும். வாழக்கூடிய வகையில் சுகாதாரமாக இருக்க வேண்டும். வசிக்கக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.

குழந்தை குட்டிகள் பிறந்தால் தாழ்வாரத்தில் நடந்து ஓட வசதிகள், வாய்ப்புக்கள் எல்லாம் அந்த வீட்டில்இருக்க வேண்டும் என்று எண்ணுவது வேறு.

வீட்டிற்குள் குடிபுகு போது அங்கேஇருக்கிற பெருச்சாளிகளை எல்லாம் விரட்டி, சந்துபொந்துகளை எல்லாம் அடைத்து வீட்டை ஒழுங்கு படுத்துவது வேறு.

அதுவும் வேண்டும், இதுவும் வேண்டும்.

இதில் எது முதல் செய்கிற காரியம் என்றால் சந்துபொந்துகளை அடைத்து பெருச்சாளிகளை எல்லாம் விரட்டி விட்டு வீட்டிற்குள் குடி போவதுதான்.

அதைத்தான் தமிழக அரசு இன்று செய்து கொண்டிருக்கிறது.

**மக்கள் பணி**

நாங்கள் நடந்து போகிற பாதையில் காலிலே குத்துகின்ற நெருஞ்சி முள்ளைத் தூக்கி வெளியே வீசி எறிந்து விட்டு போவதைப் போன்றது, எங்களுடைய பயணம்.

அந்தப் பயணம் தமிழருக்காக வாழுகின்ற பயணம்,

அது தமிழரை வாழவைக்கும் பயணம்.

தமிழருக்காக நடத்தப்படுகின்ற பயணம்.

தமிழரை வாழவைக்கின்ற பயணம்.

அந்தப் பயணத்தில் எந்தத் தங்கு தடையும் இருக்காது.

பயணம் வெற்றி பெற நாங்கள் என்றென்றும் உயிரைப் பணயமாக வைத்துப் போராடுவோம், வாதாடுவோம். பாடுபடுவோம், பணியாற்றுவோம்'

இப்படி திரு. கருணாநிதி பேசினார். [எ]

## ஆர்ப்பாட்டம்

டாக்கா, மார்ச் 13

புதிதாக பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கோரி பங்களாதேஷில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

எதிர்க்கட்சித் தலைவரான பேசம் வஜித் ஆர்ப்பாட்டங்களுக்குத் தலைமை வகித்தார். (எ)

## 10 பேர் பலி!

லிமா, மார்ச் 13

பெரு நாட்டில் லிமாவிற்கு அருகில் அண்மையில் நடந்த விமான விபத்து ஒன்றில் 19 பேர் உயிரிழந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோண்சன் JOHNSON
வெளியிணை இயந்திரங்களையும்,
உதிரிப்பாகங்களையும்
ரூலர் மடிநூல் ஈமிலி மீற்றர், வலைநூல்,
போயா போன்ற கடற்றொழில்
உபகரணங்களையும்
மலிவு விலையில் வாங்க
எம்மை நாடுங்கள்!
சென். அன்ரனீஸ்
63, யூதாததேயு வீதி,
பாசையூர், யாழ்ப்பாணம்



# உதயன்

14 - 03 - 1989 செவ்வாய்க்கிழமை




வாடிக்கையாளர்களே!
எம்மிடம் சொற்பகையிருப்பே
உள்ள ஜோண்சன் (H.P. 10)
வெளியிணை இயந்திரங்களைப்
பெற்றுக்கொள்ள முந்துங்கள்!
உதிரிப்பாகங்கள் ரூலர்
மடிநூல், போயா, வலை,
சைக்கிள் என்பனவும் மலிவு
விலையில் வாங்க,
சென். அன்ரனீஸ்
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.


## 12 இடங்களில் முட்டி மோதிய புதிய இந்திய சொகுசு பஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 14

வ.பி.போ.சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றின் சாரதி மது போதையில் பஸ் ஓட்டிய காரணத்தினால், பிரஸ்தாப பஸ் விபத்துக்கு உள்ளாகும் அளவுக்கு 12 இடங்களில் முட்டியும் மோதியும், பயணிகளைக் கதிகலங்க வைத்தது!

அதனையடுத்து பயணிகளும், முட்டுப்பட்ட பொதுமக்களும் ஆட்சேபம் செய்ததைத் தொடர்ந்து பிரஸ்தாப சாரதி பலவந்தமாக பஸ்ஸை விட்டு இறக்கப்பட்டார். பயணி ஒருவரே பஸ்ஸைத் தொடர்ந்து ஓட்டிச்சென்றார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை யாழ். நகரில் நடைபெற்றது.

வெளிமாவட்டம் ஒன்றில் இருந்து நேற்று நண்பகல் புறப்பட்ட வ.பி.போ.சபை பஸ் ஒன்று மாலையில் நகரை வந்தடைந்தது. பிரஸ்தாப பஸ்ஸின் சாரதி ஏற்கனவே மது அருந்திய நிலையில் காணப்பட்டார்.

சிறிது நேரத்தில் அதே பஸ் காங்கேசன்துறைக்குப் புறப்பட்டது. அதே சாரதி (மேலும் மது அருந்தி இருக்க வேண்டும்). மிக மோசமான நிலையில் காணப்பட்டார். அவரே பஸ்ஸையும் செலுத்த ஆரபித்தார்.

பஸ்பாதை இலக்கத்துக்கு உரிய வீதிகளால் பஸ்ஸைச் செலுத்தாது, சாரதி தன்னுடைய விருப்பத்திற்கமைய பஸ்ஸை ஓட்டிச்சென்றார்.

இவ்வாறாக மணிக்கூட்டு வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, நாவலர் வீதி ஆகிய வீதிகளினூடாக பஸ்ஸை ஓட்டிச்சென்ற அவர் மனோகரா தியேட்டர் சந்தியை அடைவதற்கிடையில் 12 இடங்களில் முட்டியும், மோதியும் விபத்து நிலையை உருவாக்கினார்.

இந்த பஸ்ஸில் பயணம் செய்தோரும் மற்றும் பொது மக்களும் ஆட்சேபம், தெரிவித்து கூச்சலில் ஈடுபட்டனர். ஆயினும் சாரதி எதற்கும் செவிமடுக்காமல் பஸ்ஸை தாமே ஓட்டப்போவதாக அடம்பிடித்தார். எனினும் பிரஸ்தாப சாரதி வலுக்கட்டாயமாக இறங்கிவிடப்பட்ட பின் பஸ்ஸில் பயணம் செய்த பிரயாணி ஒருவரே பஸ்ஸைத் தொடர்ந்து ஓட்டிச்சென்றார்.

பிரஸ்தாப பஸ் அண்மையில் இந்திய அரசால் வழங்கப்பட்ட சிறிய சொகுசு பஸ் என்பது குறிப்பிடத்தக்கது

[அ-9]

## இயக்குநர் நாயகம்

கொழும்பு, மார்ச் 14

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் புதிய இயக்குநர் நாயகமாகத் திரு. கவனனநாயக்கா நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் கூட்டுத்தாபனத்தில் நீண்டகாலம் பணியாற்றி வருகிறார். பொதுசனத் தொடர்புத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர்.

(அ)

# முஸ்லிம் காங்கிரஸ்
## உறுப்பினர் இன்று பதவியேற்பு

கொழும்பு, மார்ச் 14

வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு தெரிவான 17 முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களில் 16 பேர் இன்று திருகோணமலையில் நடைபெறும் மாகாணசபைக் கூட்டத்தில் முதல்தடவையாகக் கலந்து கொள்கிறார்கள்.

இன்று காலை 10-30 மணிக்கு ஆளுநர் முன்னிலையில் இவர்கள் பதவிப்பிரமாணம்செய்து கொள்வர்.

கடந்த நவம்ப 19 தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மாகாண சபைக் கூட்டத்தை பகிஷ்கரித்துவந்தனர் என்பது தெரிந்ததே.

வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்புக்கும் மாகாண சபை உறுப்பினர்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்கப்படாதவரை மாகாணசபைக் கூட்டங்களில் கலந்துகொள்வது இல்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் அப்போது அறிவித்திருந்தது.

சமீபத்தில் மத்திய அரசுடனும் மாகாண அரசுடனும் முஸ்லிம் காங்கிரஸ் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஏற்பட்ட இணக்கத்தைஅடுத்தே மாகாண சபையில்பங்குபற்றுவதுஎன்று முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது. (உ-எ)

## ராஜ்ய சபாவுக்கு இருவர் போட்டியின்றி தெரிவாகினர்

சென்னை, மார்ச் 14

தி.மு.க. வைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன், திரு.கே. விடுதலை விரும்பி ஆகிய இருவரும் புதுடில்லி ராஜ்யசபா எம்.பிக்களாக போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரைத் தவிர வேறு கட்சிகளின் சார்பில் எவரும் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்யவில்லை.

தமிழ்நாடு சட்டசபைத்தேர்தலில் வெற்றியீட்டிய திரு. ஜி. கே. மூப்பனார், செல்வி ஜெயலலிதா ஆகியோர் ராஜ்ய சபா எம். பி. பதவிகளை ராஜிநாமாச் செய்ததைத் தொடர்ந்துகாலியான இடங்களுக்கே இத்தெரிவு இடம் பெற்றது. (ஒ-எ)

# 17 ஆயிரம் பொலீஸார் தேவை

புதுடில்லி, மார்ச் 14

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சட்டம் - ஒழுங்கை நிலை நாட்ட பத்தாயிரம் பொலீஸாரும் ஏழாயிரம் தொண்டர் படையினரும் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

-இப்படி வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் புதுடில்லியில் யு. என். ஐ. செய்திஸ்தாபனத்திற்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா மாகாண அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்.

ஆனால் அவரின் அதிகார இயந்திரம் அதற்கு ஏற்ற வகையில் ஒத்துழைக்கவில்லை.

இலங்கை அரசு உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிடமிருந்து பெற்ற உதவியில் 30 கோடி அமெரிக்க டாலர் தொகை வடக்கு-கிழக்கு மாகாணத்தின் மறுவாழ்வுக்கு அரசு வழங்கியிருக்கிறது.

-இப்படி முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் சொன்னார். (உ-எ)

## இன்றைய கருத்தரங்கு

யாழ்ப்பாணம் மார்ச் 14

நகர சுகாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று இன்று காலை 8-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ் மாநகர ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நாவலர் கலாச்சார மண்டபத்தில் இக் கருத்தரங்கு நடைபெறும்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் கருத்தரங்கில் கருத்துரை வழங்கவுள்ளனர். (ஒ-5)

## புதிய பிரதிக் கல்விப்பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ் மாவட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி ரி. பெரியதம்பி நேற்று தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவர் யாழ். கல்வித்திணைக்களத்தில் விவசாய மனையியல் கல்வி அதிகாரியாகவும் அதன் பின்னர் வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரியாகவும் கடமையாற்றிவந்தார். (ஒ-5)

## சுட்டுக்கொலை

முல்லைத்தீவு, மார்ச் 14

குமுழமுனைப் பகுதியிலிருந்து அண்மையில் வெளியேறி இருந்த ஒருவர், அவரது வீட்டைப் பார்வையிடச் சென்றபோது சுட்டுக்கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-92)

## வயோதிபர் சூட்டுக்குப் பலி

கரவெட்டி, மார்ச் 14

நெல்லியடி, கட்டைவேலி தேவாலயத்துக்குச் சமீபமாக வயோதிபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் உ. தங்கராஜா (55 வயது). வலது குறைந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கலிகைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்தே இவர் சுட்டுக்கொல்லப் பட்டதாகக் கூறப்பட்டது.

(ஒ-70)

## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 14

யாழ் பல்கலைக் கழக முதலாம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான பரீட்சைகள் பின்போடப்பட்டுள்ளன.

பிரஸ்தாப பரீட்சைகள் நாளை 15-ஆம் திகதி முதல் 23-ஆம் திகதி வரை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது

பரீட்சை நடைபெறுவதற்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)

## கல்முனையில் மாவட்ட அமைச்சு அலுவலகம்

அம்பாறை, மார்ச் 14

வடக்கு கிழக்கு மாகாண சபையினால் அம்பாறை மாவட்டத்திற்கென ஏற்படுத்தப்படவிருக்கும் மாவட்ட அமைச்சு அலுவலகம் கல்முனையில் இயங்கவிருக்கின்றது.

இதற்கென மாவட்ட அமைச்சர் ஒருவரும் விரைவில் நியமனம் செய்யப்படுவாரென எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-14)

### கோழைத்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சோகம் கனக்கும் நெஞ்சத்துடனும், வேதனை ததும்பும் விழிகளோடும் நின்று எம்மை ஏன் கொலை செய்கிறீர் என்ற கேள்வியையே [illegible] விடுக்கின்றோம். (ஒ)

# தீவிரவாதிகளுக்கு
## டி.ஐ.ஜி. விதித்துள்ள காலக்கெடு'

கொழும்பு, மார்ச் 14

பத்துத் தினங்களுக்குள் வடமத்திய மாகாணத்தில் தீவிரவாதிகள் சரணடைந்து விட வேண்டும் என்று பிரதிப் பொலீஸ்மா அதிபர் பி. உடுகம்பொல காலக்கெடு விதித்திருக்கிறார்.

இக்காலக்கெடு கடந்த ஞாயிறு முதல் அமுலுக்கு வந்திருக்கிறது.

அருகில் உள்ள பொலீஸ் நிலையம், இராணுவ முகாம் அல்லது ஆலயங்களில் தீவிரவாதிகள் சரணடையலாம். சரணடைபவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்படும்.

இத்தகவலை பிரதிப் பொலீஸ்மா அதிபர் திரு. உடுகம்பொல அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் வெளியிட்டார்.

இதனிடையில் -

அநுராதபுரத்தில் நகரையே துவம்சம் செய்வதற்குப்போதுமான ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை - கடந்த நான்கு வாரங்களில் பொலீஸார் நடத்திய தேடுதல் வேட்டையின்போது கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-எ)

## மூவர் சரணடைந்தனராம்

பிரதிப் பொலீஸ்மா அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க அனுராதபுரம் மாவட்டத்தில் சனிக்கிழமை 3 தீவிரவாத சந்தேக நபர்கள் சரணடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

சரணடைந்தவர்களின் பாதுகாப்புக் கருதி, அவர்களின் பெயர்கள் வெளியிடப் படமாட்டாது என்று பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு. உடுகம்பொல தெரிவித்தார்.

(ஒ-எ)

### பந்த், நட்வர்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துச் சொன்னார் என்று அறிவிக்கப்பட்டது.

பேச்சுக்கள் பற்றி வெளியுறவு அமைச்சு அதிகாரி சொன்னதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் மறுசீரமைப்பு மறுவாழ்வு வசதிகளுக்கான மாகாண அரசின் திட்டங்கள் ஆகியவை பற்றி திரு. வரதராஜப்பெருமாள் பேச்சுக்களின்போது தெரிவித்தார்.

இந்திய உதவியின் அளவு பற்றி முதலமைச்சர் சில யோசனைகளைக் குறிப்பிட்டார்.

அடுத்த ஒரு சில தினங்களில் முதலமைச்சரின் யோசனைகள் விவாதிக்கப்படும்.

-இப்படி வெளியுறவு அமைச்சு அதிகாரி சொன்னார்.

அமைச்சர் கே. வி. பந்த் உடன் மாகாண முதல்வர் நடத்திய பேச்சுக்களின்போது ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கச் செயலாளர்நாயகம் திரு. கே. பத்மநாபாவும், இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற்றும் சமுகமளித்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

### தாமதமாக....

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரச ஊழியர்களும் இந்த ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாவார்கள்.

அதே சமயம் சகல அரசாங்க திணைக்களங்களிலும் வேலைக்கு வந்த நேரம், வேலையை விட்டு திரும்பிய நேரம் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்காக நேரப் பதிவு கடிகாரங்கள் வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### சிங்கள....

தெரிவித்தன.

சிங்களத் தீவிரவாதிகளின் அதிரடி நடவடிக்கைகளினால் எல்லைப்புறச் சிங்களக் கிராமங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கமுடியாத நிலையில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தோர்பின்னடித்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இம்மாதம் 31 ஆம்....

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

162 நாடுகளில் இருந்து சலுகை அடிப்படையில் 20 ஆயிரம் பேருக்கு விசா வழங்கும் அமெரிக்காவின் திட்டம் பற்றிய செய்தி ஏற்கனவே 2-3-1989 ஆம் திகதிய உதயனில் மிக விவரமாக வெளிவந்திருந்தது தெரிந்ததே.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றை அடிப்படையாக வைத்தே அந்த விவரங்கள் தரப்பட்டன.

இப்போது வாஷிங்டனில் வெளியிடப்பட்ட முன் சொன்ன வீசா செய்திமடல் உதயனுக்குக் கிடைத்துள்ளது.

அதில் உள்ள மேலதிக விவரங்களை வாசகர்கள் நலன் கருதி இங்கே தருகிறோம்:-

★ ஓ. பி — 1 திட்டம் என்ற திட்டத்தின் கீழேயே இந்தச் சலுகை முறையிலான வீசாக்கள் வழங்கப்படுகின்றன.

★ 1990 நிதியாண்டுக்குப் பத்தாயிரம் வீசாக்களும் 1991 நிதியாண்டுக்கு பத்தாயிரம் வீசாக்களும் வழங்கப்படும்.

1988 ஆம் ஆண்டில் ஐயாயிரத்துக்கும் குறைந்த அமெரிக்க வீசாக்கள் பதிவான நாடுகளில் பிறந்தவர்கள் (இந்த வகையில் மொத்தம் 162 நாடுகள்) மட்டுமே வீசாக்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

★ [illegible]

கொலம்பியா, டொமினிக்கன் குடியரசு, எல்சல்வடோர், கயானா, ஹைத்தி, இந்தியா, ஜமேய்க்கா, கொரியா, மெக்ஸிக்கோ, பிலிப்பீன்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும்-

அங்குயிலா, பேர்மியூடா, பிரிட்டிஷ், பேர்ஜின் தீவுகள், கெய்மன் தீவுகள், போக்லாந்து தீவுகள், ஜிப்ரால்ரர், ஹொங்கொங், மொன்செராஜ், பிற்கெயின் சென்ற் கெலேனா, கேக்ஸ் அன்கெரிக்கோ தீவுகள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் இந்த சலுகை விசாவைப் பெற அருகதையற்றவர்கள்.

★ கையால் எழுதப்படும் எந்த விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

★ கணவனும் மனைவியும் தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்பலாம்.

★ நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவரது மனைவியும் அல்லது கணவனும் 21 வயதுக்கு உட்பட்ட திருமணமாகாத பிள்ளைகளும் அமெரிக்கா செல்ல அருகதை உடையவர்கள்.

★ அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியுள்ள வெளிநாட்டவர் ஒருவரும் இந்தச் சலுகை விசாவுக்கு விண்ணப்பிக்கலாம்.

★ விண்ணப்பங்கள், கடித உறை விலாசம் என்பன கட்டாயமாக தட்டச்சுச் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(அ-10)

# மரண அறிவித்தல்கள்

(சைவமணி, சித்தாந்தச் செம்மல், செஞ்சொல்வாரிதி)

## வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள்

இளைப்பாறிய காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம. ம, வித்தியாலய தமிழ் விரிவுரையாளரும், காரைநகர் பிரசைகள் குழுச் செயலாளரும், மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை உறுப்பினருமான சைவமணி சித்தாந்தச் செம்மல், செஞ்சொல்வாரிதி வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள் 11-03-1989 அகால மரணமாகிவிட்டார். அன்னார் சேதுநாயகியின் அன்புக்கணவரும், காலம்சென்ற புதுரோட் வே. முத்தையா சின்னக்குட்டி தம்பதிகளின் கனிஷ்ட-புத்திரனும், பாலசுப்பிரமணியம் (சவுதி அரேபியா), பாலச்சந்திரன் (கனடா), பாலகிருஷ்ணன் (பாலா அச்சகம் காரைநகர்) பாலசுந்தரம் (பாலா ரேடேர்ஸ் கொழும்பு), பாலசிங்கம் (வத்தளை பிரின்டேர்ஸ் கொழும்பு15), கலாமதி B.A (ஆசிரியை சாளாவ தமிழ் மகாவித்தியாலயம்-அவிசாவளை) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசமலர், இரட்சாயினி (கனடா), செந்தாமரைச் செல்வி, யோகமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆனந், அஜந்தா, கௌரிசங்கர், சிவசங்கரி, தீவசங்கரி, கிருஷ்ணப்பிரியா, காயத்திரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 14-3-1989 செவ்வாய்க்கிழமை 10-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில்(மதியகம், சயம்பு வீதி, காரைநகர்)நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சே. சபாரத்தினமும்
குடும்பத்தினரும்

சயம்பு வீதி,
காரைநகர்.

(10004)

## திரு. வேலாயுதம் கிருஷ்ணபிள்ளை
(வரி உத்தியோகத்தர் - கொழும்பு)

வேலாயுதம் கிருஷ்ணபிள்ளை கொழும்பில் காலமானார். இவர் காலம்சென்ற வேலாயுதம் கண்மணி தம்பதிகளின் புதல்வரும், காந்தராணியின் அன்புக் கணவரும், கிருஷ்ணகாந்தன் (ஜேர்மனி), சதிஸ்காந்தன் [யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலம்சென்ற செல்லத்துரை, தங்கேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், மங்கையற்கரசி, கனகேஸ்வரி, ராசரெட்ணம் ஆகியோரின் சகோதரரும், செல்வராணி, செல்வராசா, செல்வக்காந்தராசா,புஷ்பதேவி, யோகேஸ்வரி, இந்திராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி, மகள்.

260/18, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(10006)

## திருமதி தம்பையா செல்லமுத்து
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

திருமதி தம்பையா செல்லமுத்து காலமானார். இவர் காலஞ்சென்ற துரைசிங்கத்தின் மாமியும், பாக்கியரத்தினத்தின் தாயாரும், மோகன், ஜெயம் (Germany), பிரியதர்சினி, பிரேமதர்சினி (Holland), றங்கன், சீலன் (Canada), காந்தன் (Swiss), ஜீவதர்சினி, ராகவன், ரேவதி, சுரேந்திரதாசன், சிறிதர் (Holland), கமலா இவர்களின் பேத்தியும், கஜன், மயூரா, கயல்விழி, காயத்திரி ஆகியோரின் பூட்டியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை 1-00மணிக்கு ஏழாலையிலுள்ளஅவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மகள் - பாக்கியரத்தினம்

(9648)

## திரு. நாகலிங்கம் கதிரேசு

சுழிபுரம் மேற்கு பெரியதம்பிரான் கோவிலடியைச் சேர்ந்த திரு. நாகலிங்கம் கதிரேசு 13-03-89 அன்று காலமானார். இவர் மாரிமுத்துவின் அன்புக் கணவரும், பூமாதேவி, ஸ்ரீதேவி, வரதராணி, வரதராஜா (வலிமேற்கு பிரதேசசபை, உப அலுவலகம் அராலி), வேலுப்பிள்ளை (கச்சேரி, கிளிநொச்சி - புள்ளிவிபரப்பகுதி), நாகலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ந. பாலசுப்பிரமணியம், சி. தேவதாசன் (கச்சேரி - யாழ்ப்பாணம்), கா. சேனாதிராசா (C. T. B. கோண்டாவில்), வ. மல்லிகாதேவி, (வ.பி. மேற்குப் பிரதேசசபை-உபஅலுவலகம் அராலி), வே. உமா ஆகியோரின் அன்பு மாமனாரும், பா. ரவிச்சந்திரன், வ. றேணுகா, வே. ஜெனார்த்தனன், வ. ஷயந்தன், வே. விஜேனார்த்தனன், சே. மோகனப்பிரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-03-89ஆம் திகதி அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 1-00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல்
பிள்ளைகள்.

(10003)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2, இல் உள்ள அச்சகத்தில் 14 - 03 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.